விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 12 வியாழக்கிழமை (28.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## அச்சுறுத்தலுக்கு மத்தியில் தமிழர் தாயகத்தில்
# உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு

### துயிலும் இல்லம் அனைத்தும் கண்ணீரில் நனைந்தது
### ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலிக்காக திரள்வு

*(யாழ்ப்பாணம்)*

**அச்சுறுத்தலுக்கு மத்தியில் தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.**

**துயிலும் இல்லங்கள் அனைத்தும் கண்ணீரால் நனைந்தது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு மாவீரர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.**


தமிழ் மக்களின் விடிவிற்காக உயிரை அர்ப்பணித்த மாவீரர்களை நேற்று உலகத்தமிழினம் உணர்வெழுச்சியுடன் நினைவு கூர்ந்தது.

தமிழர் தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசங்களில் வாழும் மக்கள இலங்கை நேரப்படி மாலை 6.05 மணிக்கு கூட்டாக மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, மாவீரர்கீதம் ஒலிக்க, பொதுச்சுடரேற்றப்பட, அஞ்சலிக்காக கூடியருந்த மக்கள் நினைவுச் சுடரை ஏற்றி அஞ்சலி 23



## தடைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி



### பெருந்திரளாக திரண்ட மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

பல தடைகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின நினைவேந்தல் கொட்டும் மழைக்கு மத்தியில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் பல வழிகளி 23

## யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டின் சமையலறையிலிருந்து நேற்று குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

இச்சம்பவத்தில் யாழ்ப் பாணம் கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த சுரேந்திரன் 23

## விபத்துக்குள்ளான இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்துக்குள்ளான இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகிந்தன் (வயது - 37) என்ற இளைஞரே உயிரி ழந்தவராவார். 23

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கனகபுரம் துயிலுமில்லத்தில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர்.

நேற்றுக் காலையிலேயே துயிலுமில்ல ஏற்பாட்டு பணிகள் பூர்த்தியாகியிருந்த நிலையில், நேற்றுப் 23



## ஐ.நா தீர்மானத்தை பரிசீலனை செய்தால் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் – சுமந்திரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றிய, இலங்கையின், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கான, 30/1 தீர்மானத்தை பரிசீலனை செய்யும் அரசாங்கத்தின் முடிவு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுமந்திரன், சர்வதேச அளவில் நாட்டைப் பற்றி எதிர்மறை 23

## வருணபகவானும் மாவீரர்களுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் மாவீரர்களுக்கு நேற்று வருணபகவானும் தனது அஞ்சலியைச் செலுத்தினர்.

தாயகத்திலுள்ள அனைத்து துயிலுமில்லங்களிலும் 23

## தமிழ்நாட்டில் புலிகள் பயிற்சி பெற்ற இடத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி




(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் உள்ள கொளத்தூர் என்ற இடத்திலே இராணுவப் பயிற்சிகளை பெற்றிருந்தார்கள்.

அந்த கொளத்தூர் பிரதேசத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் மணி 23

**இப் பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன் பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

# IOM நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் உலகளாவிய முறையற்ற புலம்பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் (Global Assistance for Irregular Migrants)

**இத்திட்டத்தினூடாக நாடும் திரும்பவும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் முடியும்.**

நீங்கள் மேற்கு ஆபிரிக்க நாடொன்றில் தங்களது பயணத்தை ஒழுங்கமைத்த முகவரால் கைவிடப்பட்ட நிலையில் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளீர்களா? அப்படியாயின் இப்பகுதி தங்களுக்கு நிச்சயமாக உதவக்கூடும். வேறு நாடுகளில் திக்கற்றநிலையில் முகவரால் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவும் வாய்ப்புகள் உள்ளன.

## உலகளாவிய முறையற்ற புலம்பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் (Global Assistance for Irregular migrants)

இன்றைய இந்த பகுதியினூடாக நாம் **IOM** நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் உலகளாவிய முறையற்ற புலம்பெயர்வாளர்களுக்கான உதவித் திட்டம் **(Global Assistance for Irregular migrants - GAIM)** தொடர்பாக சிறிது தெரிந்து கொள்வோம். அதனை வாசிக்கும் போதே எம்மில் பலருக்கு இத் திட்டத்தை ஏன் நாம் அறிந்த கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். எனவே நாம் இந்த கெயிம் **GAIM** திட்டம் என்றால் என்ன? அதனால் வழங்கப்படும் சேவைகள் எவை என்பது தொடர்பாக தெரிந்து கொண்டால் அதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள முடியும்.

### நீங்கள் முறையற்ற புலம்பெயர்வினால் பாதிக்கப்பட்ட ஒருவராக இருக்கக்கூடும்.

.நீங்கள் வளர்ச்சியடைந்த நாடொன்றை சென்றடைவதற்காக இலங்கையை விட்டு வேறொரு நாடொன்றுக்கு குடிபெயர்ந்து அங்கு பயண ஏற்பாடு செய்த முகவரால் நிர்க்கதிக்காளாகியிருப்பின் **GAIM** திட்டத்திற்கு ஊடாக தாங்கள் நாடு திரும்புவதற்கு உதவும் வாய்ப்புள்ளது. இக் கெயிம் திட்டத்தினூடாக தாங்கள் நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டுள்ள நாட்டில் உள்ள **IOM** அலுவலகத்திலோ அல்லது அருகிலுள்ள நாட்டிலுள்ள **IOM** நிறுவனத்தினை தொடர்பு கொள்வதன் மூலம் தாங்கள் நன்மையடைய முடியும்.

ஆட்கடத்தல்காரர்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் கனடாவுக்கு அனுப்பி வைப்பதாக பிழையான வாக்குறுதிகளை வழங்கி புலம்பெயர்வாளர்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றனர். அதேவேளை பாதிக்கப்படுவோரும் அவர் சார்ந்த சமூகமும் மேற்காபிரிக்க நாடொன்றில் இருந்து கொண்டு கனடாவுக்கான வீசாவை பெற்றுக் கொள்ளவோ அல்லது கனடாவில் தஞ்சம் கோரவோ முடியும் என நம்ப வைக்கப்படுகின்றனர். ஆனால் இது உண்மைக்கு புறம்பானது. நீங்கள் இவ்வாறான பிழையான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றப்படலாம் என்பதோடு தங்களது பணம், சொத்துக்கள் மற்றும் பொன்னான நேரத்தையும் இழக்கக்கூடும். நீங்கள் இவ்வாறான இடைத்தங்கல் நாடொன்றில் நிர்க்கதிக்கு உள்ளாகி எவ்வாறு நாடுதிரும்புவது என்று தெரியாமல் உள்ளீர்கள் என்றால் தயவுசெய்து உதவிகளுக்கு **IOM** நிறுவனத்தை தொடர்புகொள்ளவும்

கனடா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் மீள்திரும்புவோருக்கு சிறுதொழில் முயற்சிகளுக்கான உதவி வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்க. உலகின் எந்த நாட்டிலாவது (மத்திய கிழக்கு நாடுகள் தவிர்ந்த) நிர்க்கதியாக கைவிடப்பட்ட இலங்கையர் யாரும் கீழுள்ள இலக்கங்களின் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளமுடியும்.

**IOM Sri Lanka**

Telephone :+94 11 532 5362
Hotline: 077 441 0086

Viber: 077 441 0086

Whats App: 077 441 0086

சுயவிருப்பின் பேரில் இலங்கைக்கு திரும்பி வரவிரும்புபவர்களுக்கு மாத்திரமே இத்திட்டத்தில் நன்மையடைய முடியும். அது தன்னிச்சையான நாடு திரும்பல் **(Voluntary return)** ஆக அமையும் பட்சத்தில் மாத்திரமே கெயிம் திட்டத்தினூடாக நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.


. அதற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிட்ட உதவிகளும் வழங்கப்படும்.

- நிர்க்கதியாகி இருக்கும் நாட்டில் அவசரகால தங்குமிடம்
- மீள் திரும்புதலுக்கு முன்னரான மருத்துவ உதவி
- உணவு
- தேவையான உடைகள்
- வீடு திரும்புவதற்கான விமான பயணச்சீட்டு
- பயண ஆவணங்களை பெற்றுக் கொடுத்தல்
- நாடு திரும்பிய பின்னர் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உதவி
- விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்புவதற்கான போக்குவரத்து உதவி
- மீள் திரும்பிய பின்னர் மருத்துவ உதவி

இவ்வாறு நாடு திரும்பியவர்களின் காணொலிகளை **IOM Sri Lanka and Maldives** என்ற முகநூல் பக்கத்தில் காண முடியும்.

இன்றைய விடயப் பரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை முறையற்ற புலம்பெயர்வும் அதனால் ஏற்படக்கூடிய சட்டரீதியான பாதிப்புக்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு, கீழேதரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவதனூடாக, நாளொன்றுக்கு தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க்காட்டப்பட்ட **SMS** வடிவத்தில் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவுதனூடாக குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் சரியான விடைக்குரியவர்களும் இத்தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்லமுடியும். போட்டி இறுதித் திகதியின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத்தரப்படுவார்கள். வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் திட்டங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாக அழைத்து விபரங்களை பெறமுடியும் 077 441 0086

## குறுக்கெழுத்து போட்டி இல -04



மேலிருந்துகீழ்

1. கெயிம் **(GAIM)** திட்டத்தினூடாக இடைத்தங்கல் நாட்டிலும், மீள் திரும்பியபின்னரும் இவ்வுதவி வழங்கப்படும்?

2. கெயிம் திட்டத்தினூடாக இடைத்தங்கல் நாட்டில் வழங்கப்படும் உதவிகளில் ஒன்று?

3. முறையற்ற புலம்பெயர்வாளர்கள் போலி................ ஆல் நிர்க்கதிக்கு உள்ளாக்கப் படுகின்றனர்?

4. மேற்காபிரிக்க நாடு ஒன்றில் இருந்து கனடாவுக்கான வீசாவினை பெற்றுக்கொள்ள முடியும்? ஆம்/இல்லை

5. பாதிக்கப்பட்டவர் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவிக்கும் நடைமுறையானது ............ நாடு திரும்பல் என அழைக்கப்படும்

6. பயண ஏற்பாடு செய்த முகவர் தங்களை ஏதாவது ஒரு நாட்டில் நிராதரவாக கைவிட்டு செல்லும் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?

7. கெயிம் திட்டத்தினூடாக நன்மையடையக் கூடிய நாடுகளின் வலயம்

8. அவசரகால தங்குமிட வசதி கெயிம் திட்டத்தினூடாக மீள் திரும்பவழங்கப்படும் (தலைகீழாகவுள்ளது) (முன்னர்/பின்னர்)

இடமிருந்துவலம்

1. கெயிம் திட்டத்தினூடாக நன்மையடைய முடியாத நாடுகளின் வலயம்

4. பயண ஏற்பாடு செய்த முகவர் தங்களை ஏதாவது ஒரு நாட்டில் நிராதரவாக கைவிட்டு செல்லும் நாடு எவ்வாறு அழைக்கப்படும்

8. கெயிம் திட்டமானது..................புலம்பெயர்வாளர்களுக்கு உதவி வழங்கும் திட்டமாகும்

9.. **GAIM** (கெயிம்) திட்டமானது எந்த நாட்டு அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படுகின்றது

10. கெயிம் **(GAIM)** திட்டத்தினூடாக தன்னிச்சையாக நாடுதிரும்புபவர்களுக்கு சிறுதொழில் முயற்சிக்கான உதவிவழங்கப்படும்? சரி/பிழை

**குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி திகதி 05.12.2019, குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் புத்திரிகையில் கட்டத்தினை வெட்டி அனுப்பலாம். அல்லது சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம். எந்த வயதுப் பிரிவினரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.**

**கடித உறையின் இடது மூலையில் குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் (அன்றையதிகதி) என குறிப்பிட்டு அனுப்பவும்**
**பின்வரும் விபரங்களையும் விடைகளுடன் இணைத்து அனுப்பவும்**
**பெயர்:**
**வயது:**
**பால்:**
**முகவரி:**
**தொலைபேசி இலக்கம்:**
**(சிறுவர்களாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இல்க்கம்)**
**அனுப்ப வேண்டிய முகவரி:** IOM
**இலக்கம் 439,**
**கோயில் வீதி,**
**நல்லூர்.**

தங்களது நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா வீசாவில் செல்லுமாறும் அங்கு கிடைக்கக்கூடிய ஏதாவது வேலையை கொஞ்சநாட்கள் வேலைக்கான அனுமதிபத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காகசெய்யுமாறும் கூறுகிறார்? இது ஒரு முறையான/ பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கிறீர்களா?

- ஆம்
- இல்லை

இக்கேள்விக்கான பதிலை கீழ்க் குறிப்பிட்ட முறையில் **IOM** இன் நேரடி தொலைபேசி இலக்கமான 077 441 0086 க்கு **SMS** /குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்.

**SMS /குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய வடிவம்**
**பால் வயது இடம் விடை ------ 077 441 0086**
**உதாரணம் : M-14-Jaffna-Answer**
**ஆண்-14-யாழ்ப்பாணம்-சரியான விடை**

(C-8314)

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்கிளை

## ஓகன் வகுப்பு ஆரம்பம்



நடைபெற்றுவரும் கலை வகுப்புகளுடன் பலரது வேண்டுகோளுக்கு இணங்க ஓகன் வகுப்பும் ஆரம்பிக்கவுள்ளதால் அதில் இணைய விரும்புவோர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**ஆரம்பம் : 29.11.2019**
**வெள்ளிக்கிழமை மாலை 6.00**

பதிவாளர், கிழவன்காடு கலாமன்றம் யாழ்கிளை
இல.428, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோவில் அருகாமை)
077 578 6638
(C-8357)


# வட பகுதிக்கான ரயில் சேவைகள் நேற்று இரவு ரத்து

(கொழும்பு)

யாழ். தேவி ரயில் தடம்புரள்வு காரண மாக வட பகுதி பாதையில் நேற்று இரவு பயணிக்கவிருந்த இரவு நேர தபால் ரயில்கள் நான்கின் பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ள தாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப் பாணம் மற்றும் காங்கேசந்துறை வரையில் செல்லும் ரயிலும், காங்கேசந்துறை ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கவிருந்த ரயில்களுமே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக் களம் மேலும் கூறியுள்ளது. (ம-3)

# பொலிஸ் பேச்சாளரின் பணிகள் நிறுத்தம்

(கொழும்பு)

பல வருடங்களாக ஊடகங்களுக்கு தக வல்களை வழங்கி வந்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நேற்று முதல் நிறுத் தப்பட்டுள்ளன. அத்துடன் பொலிஸ் பேச்சாள ரின் பணிகளும் நேற்று இடை நிறுத்தப் பட்டிருந்தது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்வதை உடன் நிறுத்துமாறு மேலிடத்திலிருந்து வந்த உத்தரவொன்றுக்கு அமைய பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நேற்று ஊடகப் பேச்சாளர் மற்றும் அவரது அலுவலக பணிகள் நிறுத்தப்பட்ட தாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் பொலிஸ் பேச்சாளர் மற்றும் அவரது அலுவலகம் முன்னெடுத்த தகவல் வழங்கும் பணிகளை பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் ஊடாக முன் னெடுக்க உத்தேசிக் கப்பட்டுள்ளதாக வும், அந்த திட்டத் துக்கு அமையவே பொலிஸ் தலைமை யகத்தில் உள்ள பொலிஸ் பேச்சாளர் அலுவலகத் துக்கு தடைவிதிக் கப்பட் டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



பராமரிப்பும் சுகப்படுத்தலும்
உங்கள் வீடுகளில் வயோதிப நோயாளர் களை பராமரிப்பதில் சிரமப்படுகிறீர்களா? எங்கள் இடத்தில் வைத்து உங்கள் உறவு களை உரிய முறையில் பராமரிக்கப்படும்.
077 873 0129 (1308)


## துயர் பகிர்கின்றோம்

அமரர்
**சண்முகம் சற்குணதேவி**



எமது பாடசாலையின் ஆசிரிய
நலன்புரி சங்கத்தின்
உறுப்பினரான
திரு. குருசுமுத்து ஆசிரியர்
அவர்களின் அன்பு மாமியாரான
அமரர்
சண்முகம் சற்குணதேவி
அவர்கள் கடந்த 22.11.2019 வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தமை அறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
பா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் - சுதுமலை.
(C-8355)

## விழி நீர் சொரிகின்றோம்



எமது பாடசாலையின்
ஆசிரியர் திருமதி
அனிதா வாகீசன்
அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்
**து.கெங்காதரன்**
அவர்கள் 27.11.2019ல் அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

செல்விபுரம், பூநகரி. (1310)
பாடசாலை நலன்புரிச் சங்கம்
கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

**கணபதிப்பிள்ளை மகிந்தன்**

பிறப்பு 29 • 05 • 1982



இறப்பு 27 • 11 • 2019

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி கேமமாலினி கணபதிப்பிள்ளை அவர்களின்
அன்புச் சகோதரன்
கணபதிப்பிள்ளை மகிந்தன்
அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
(1312) யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.


## உழைக்கும் மக்களின் தலைவனை வாழ்த்தி வரவேற்கிறோம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகமும், கடற்றொழில் மற்றும்
நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சருமான
கௌரவ
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்கள்

உழைக்கும் மக்களால் போற்றப்படும் தலைவனே
பார்போற்ற எமக்காக வந்துதித்த முதல்வனே
எமது கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு
சேவைதனை பெற்று தந்திடவும் எமது தமிழ்
மக்களின் வாழ்விற்கும் பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களை நம்பி
வாழ்கின்ற மக்களுக்காக சேவையாற்ற வந்துள்ள
மக்களின் தலைவனை அமைச்சர் என்னும்
நாமத்தோடு வாழ்த்தி வரவேற்கிறோம்.

வாழ்த்துவோர் - சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க
அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
(1309)


## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலுள்ள மருதமரக்குற்றிகள், தேக்கமரக்குற்றிகள், வேப்பமரக்குற்றிகள், விறகுக்காக பயன்படுத்தக்கூடிய கொப்புகள் மற்றும் பாவித்த ஓடுகள், சீற்கள், சிலாகைகள், சுருக்கு கேற் என்பன பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

**காலம் :-** 10.12.2019 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி
**இடம் :-** தலைமை அலுவலகம்

**நிபந்தனைகள்**

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகவும் ரூபா 2000.00 மீளளிக்கப்படும் பணமாகவும் செலுத்தப்படல் வேண்டும்.

2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை அலுவலகத் திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

3. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.
2019.11.28
(C-8354)

# தாயகத்திலும் புலத்திலும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள்


அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு


முல்லைத்தீவு அலம்பில்


வன்னி விளாங்குளம்


ஆலங்குளம்


பருத்தித்துறை முனைப்பகுதி


வவுனியா ஈச்சங்குளம்


கனகபுரம்


பருத்தித்துறை சுப்பர் மடம்


விசுவமடு


கொடிகாமம்


சாட்டி


தீருவில்


கோப்பாய்


முழங்காவில்


தேராவில்


மன்னார் பண்டிவிரிச்சான்


உடுத்துறை


மன்னார் ஆட்காட்டிவெளி


கனடா




பிரான்ஸ்


நியூசிலாந்து


சென்னை பல்கலை

செய்தியாளர்கள் :- 03, 09, 10, 30, 60, 78, 100, 114, 250, 281, 285, 299, 312, 316, 350

# மரண அறிவித்தல்



## செல்வன் நடராசா கதீசன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1995.09.08 | 2019.11.24 |

கிளிநொச்சி இராமநாதபுரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா கதீசன் அவர்கள் 24.11.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் கனகமணி தம்பதியர் மற்றும் காலஞ்சென்ற சூசைமுத்து (மன்னர் மணியம்) பாக்கியம் தம்பதியரின் அன்பு பேரனும், நடராசா (ஓய்வுநிலை அதிபர் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), ஆன் புனித ஜெயந்தி (ஆசிரியை கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்) தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், சியானுகா, பரிதியன் ஆகியோரின் அன்பு சகோதரனும், செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா (பாபு மனேஜர்) மற்றும் வரதராசா, விமலராசா, ஜெயராசா (கனடா), புஸ்பகாந்தி ஆகியோரின் பெறாமகனும், செல்வராணி, சாந்தினி, தேவிகா (கனடா), வசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (லண்டன்), சுகந்தி (நோர்வே), காலஞ்சென்றவர்களான அல்பேட் (பேபி), றொபட் (பபி) மற்றும் எட்வேட் (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.11.2019 வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இராமநாதபுரத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-8351)

இராமநாதபுரம்,
கிளிநொச்சி

தொடர்புகளுக்கு:-
021 206 0633

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-11 ஆசீர்வாதப்பர் வீதியில் ஆதன இலக்கம் 211 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் அரசடி பிள்ளையார் கோவில் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

நல்லூர் ஆறுமுகம் செல்லப்பா என்பவர் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு கி.துரைசிங்கம் அவர்களின் முகதாவில் 2433ம் இலக்க ரிறஸ்ரி நியமனம் என்னும் வெளிப்படுத்தல் உறுதி 1950 மார்கழி 17ம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 23.10.1963ம் திகதியிடப்பட்ட 13422ல் இலக்க அறுதி உறுதி பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்டு சதாசிவத்தினால் தம்பையா மனைவி செல்வநாயகம் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை ஆசீர்வாதப்பர் ஒழுங்கையை சேர்ந்த தம்பையா கைம்பெண் செல்வநாயகம் 06.09.1982ம் திகதி 6719ம் இலக்கத்தில் சீதன உறுதியினை பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் நிறைவேற்றி தனது புத்திரி துரைராசசிங்கம் பெண் விமலாதேவிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர், 07.02.2019ம் திகதியிடப்பட்ட 2303ம் இலக்க சீதன உறுதி பிரசித்த நொத்தாரிசு ரிஷிபா இராசா மூலம் நிறைவேற்றப்பட்டு துரைராஜசிங்கம் பெண் விமலாதேவி தனது மகளான சுரேஸ்குமார் பெண் விஜிதாவுக்கு இதன் பின்னகத்தான ஆதனத்தினை சீதனமாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை தற்போது அரியாலை இறை யாழ்ப்பாணம் மாநகரசபை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு J/91 அரியாலை வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட "வெட்டுக்குளம் வயல்" நில.பர இரண்டு குளி ஒன்றும் நி.ப.2 குளி 01.00 வீடும். நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் 2016.05.09ம் திகதி 2479 இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டி அளந்ததன்படி நிலபரப்பு 1 குளி 16.90

கிழக்கு:- தேவகுணராசா பெண் சறோஜினிதேவிக்குரிய ஆதனம்.
வடக்கு:- வெட்டுக்குள நாச்சி அம்மாள் கோவிலுக்குரிய ஆதனம்.
மேற்கு:- இராசையா தாமோதரம்பிள்ளையின் ஆதனம்.
தெற்கு:- வீதி இதடங்கல் அனைத்தும் இன்னும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும்.

தற்போது சுரேஸ்குமார் பெண் விஜிதா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சுரேஸ்குமார் பெண் விஜிதா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(C-8343)


(இம்மானுவல் ஆனல்ட்) முதல்வர், யாழ்.மாநகரசபை.

# மரண அறிவித்தல்

## கந்தையா தேவதாசன்

### (தேவர், நவரத்தினம்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05.05.1937 | 26.11.2019 |



கொயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தேவதாசன் (தேவர் நவரத்தினம்) அவர்கள் 26.11.2019 கடந்த செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் மகனும் செல்வமலரின் அன்புக் கணவரும் உதயகுமாரி (ஆசிரியர் - யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), உதயகுமாரன், உதயதாசன் (லண்டன்), உதயகாந்தன் (லண்டன்), உதயசேகர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமியின் (திரவியம்) சகோதரனும் தவத்துரை (எரிபொருள் நிரப்பு நிலையம், கொடிகாமம்), பாஸ்கரி, கௌசல்யா (லண்டன்), வக்சலா (லண்டன்), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜிதா (வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி - ஆசிரிய மாணவி), அபீதன், கோபிகன் (உயர்தர மாணவன் 2019 - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சஜீகா (உயர்தர மாணவி - கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), பவீதன், தஜீவன், தரூசன், திபிஜன் (மாணவர்கள் - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பவிஷன் (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), மதுசிகா, ஆசகா, லக்மியா (லண்டன்), ஜஷானி, ஜனிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவகணேசன் (ஆசிரிய ஆலோசகர் - நீர்கொழும்பு), சந்திரகணேசன் (சுவிஸ்), கமலினி (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டைபறித்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொயிலாமனை,
கொடிகாமம்.

(C-8344)

தகவல்: குடும்பத்தினர்
077 409 0751

# கனவுகளும் பலன்களும்

## கனவுகளில் ஐம்பூதங்கள் - நீர்

தாகம் தணியத் தண்ணீர் குடிப்பது போலக் கனவு கண்டால் உள்ளத்தில் உள்ள ஆசை ஒன்று நிறைவேறும். குளிப்பது போலக் கனவு கண்டால் துன்பங்கள் விலகும்.

தண்ணீரில் நீந்துவது போலக் கனவு கண்டால் இடையூறுகள் ஏற்படும். நீந்திக் கரை சேருவது போலக் கனவு கண்டால் இடையூறுகள் நீங்கி வெற்றி உண்டாகும். நீச்சல் போட்டியில் வெற்றி பெறுவது போலக் கனவு கண்டால் பொருள் வரவு ஏற்படும்.

நீர்க்குமிழிகளை கனவில் கண்டால் நஷ்டங்கள் உண்டாகும். வீண்பழிகள் வந்து சேரும். கனவில் பனிக்கூட்டியைப் பார்த்தால் தனலாபம் ஏற்படும்.

கடல் அலைகளில் சிக்கிச் கொண்டது போலக் கனவு கண்டால் இன்னல்களில் சிக்கி அவதிப்பட நேரும். ஓடையில் தெளிந்த நீர் செல்வது போல் கனவு கண்டால் தொழில், உடல்நலம் ஆகியவற்றில் மேன்மை ஏற்படும். கலங்கிய நீர் ஓடுவது போலக் கண்டால் பண நஷ்டமும், நோய்களும் உண்டாகும்.

நீர் நிறைந்த தடாகத்தைக் கண்டால் திட்டங்கள் நிறைவேறும். பணவரவு உண்டாகும். பாத்திரத்தில் நீர் நிறைந்து வழிந்து ஓடுவது போலக் கனவு கண்டால் பெரும் செல்வம் தேடி வரும்.

பல் தேய்த்து வாய் கொப்பளிப்பது போலக் கனவு கண்டால் நோய்கள் நீங்கும்.

சுத்தமான கிணற்று நீரைப் பார்த்தால் செல்வம் பெருகும். நற்பயன்கள் உண்டாகும். அசுத்தமான கிணற்று நீரைப் பார்த்தால் துன்பங்கள் ஏற்படும்.

கிணற்றைக் கனவில் பார்த்தால் நன்மைகள் நடக்கும். கிணறு தோண்டுவதாகக் கனவு கண்டால் வறுமை நிலையில் இருந்தாலும் பொருள் வரவால் உயர்ந்த நிலையை அடைவர். கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதாகக் கண்டால் தொழிலில் வருமானம் பெருகும். திருமணமான பெண் கிணற்று நீரைக் கொண்டு கிணற்று நீர் நிறைந்து வழிவதாகக் கண்டால் தொழிலில் தடைகளும் நஷ்டமும் ஏற்படும்.

கிணற்றில் விழுவது போலக் கனவு கண்டால் இதுவரை அனுபவித்து வந்த கஷ்டங்கள் தீரும். வாழ்வில் சுபீட்சம் வந்து சேரும். கடலில் கப்பல் மூழ்குவதாகக் கனவு கண்டால் செய்தொழிலில் நஷ்டம் ஏற்படும்.

தண்ணீர் வற்றிய குளத்தையோ, ஆற்றையோ, கிணற்றையோ கனவில் கண்டால் பணப் பற்றாக்குறை ஏற்படும். அதனால் பலவித கஷ்டங்கள் உண்டாகும்.

மழை பெய்வதைக் கனவில் கண்டால் நோய்கள் உண்டாகும்.

ஆற்றில் குளிக்கும் போது ஆடை தண்ணீரில் நழுவிப் போய்விட்டதாகக் கனவு கண்டால் அபவாதங்கள் ஏற்படும். புகழுக்குக் களங்கம் ஏற்படும்.

# தேசிய வாசிப்பு மாதம்-2019 வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தரம் 01: 1ஆம் இடம் ர.கர்ணிகா யா/வேலணை சைவபிரகாச வித்தியாலயம், 2ஆம் இடம் செ.தனுஷினி யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் ஜி.லாரூசன் யா/வேலணை சைவபிரகாச வித்தியாலயம்.

தரம் 02: 1ஆம் இடம் ஜ.டனுஸ்கா யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 2ஆம் இடம் ச.சங்கவி யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் சூ.ஆதவி யா/வேலணை சைவபிரகாச வித்தியாலயம்.

தரம் 03: 1ஆம் இடம் சி.திலக்ஷன் யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 2ஆம் இடம் ஹே.செனால் யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், 3ஆம் இடம் ச.ஜெரோனியா யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.

தரம் 04: 1ஆம் இடம் உ.பிரவீனா யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், 2ஆம் இடம் வி.அபிஷேகா யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், 3ஆம் இடம் சூ.ஆர்த்தி யா/வேலணை சைவபிரகாச வித்தியாலயம்.

தரம் 05: 1ஆம் இடம் ச.சந்தியா யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், 2ஆம் இடம் வி.ஹரிசன் யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் இ.சயந்தினி யா/வேலணை சைவபிரகாச வித்தியாலயம்.

தரம் 06: 1ஆம் இடம் ம.வைஸ்னவி யா/வேலணை மத்திய கல்லூரி, 1ஆம் இடம் வி.டிலக்ஷா யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் ச. லிகோறி யா/வேலணை மத்திய கல்லூரி.

தரம் 07: 1ஆம் இடம் கோ.வஞ்சிமறவன் யா/வேலணை மத்திய கல்லூரி, 2ஆம் இடம் ச.விஜிதன் யா/வேலணை மத்திய கல்லூரி, 3ஆம் இடம் வி.ஐஸ்வர்யா யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

தரம் 08: 1ஆம் இடம் அ.தனுஜா யா/வேலணை மத்திய கல்லூரி, 2ஆம் இடம் வி.மிதுஷிகா யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், சி.சிந்துஜா 3ஆம் இடம் யா/வேலணை மத்திய கல்லூரி.

தரம் 09: 1ஆம் இடம் ற.றஜிதா யா/வேலணை மத்திய கல்லூரி, 2ஆம் இடம் வி.பிரன்யா யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் சி.விதுசிகா யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.

தரம் 10-11: 1ஆம் இடம் ப.சரணியா யா/வேலணை மத்திய கல்லூரி, 2ஆம் இடம் ர.நிஷாந்தினி யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், 3ஆம் இடம் ம.கௌதமி யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

சதுரங்க போட்டி முடிவுகள்: 1ஆம் இடம் அ.நிறோஜன் யா/வேலணை மத்திய கல்லூரி, 2ஆம் இடம் அ.பிரியவர்மன் யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், 3ஆம் இடம் த.பவித்திரன் யா/வேலணை மத்திய கல்லூரி. (இ)



மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையிலுள்ள சூரிய மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. மாவீரர்கள் இருவரின் பெற்றோர்கள் பொதுச் சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

# இராசி பலன்

28.11.2019

கார்த்திகை 12, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

துதியை முன்னிரவு 7.59 மணிவரை

கேட்டை முற்பகல் 9.43 மணிவரை

சுபநேரம் 7.43 - 9.13 மணிவரை

இராகுகாலம் 1.43 - 3.13 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது, குரு, சுக் | சூரி, சந் | செவ், புத | |

சந்திராஷ்டமம்: கார்த்திகை

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத முரண்பாடுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முற்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கடன்சுமை குறையும் நாள்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் கூடும் நாள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், சிக்கனத்தைக் கடைப் பிடிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் முன்னேற்றம் கருதி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பீர்கள்.

# இறந்த உறவுகளுக்காக நினைவேந்தும் உரிமையை யாரும் தடுக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

எமது உரிமைப் போரிலும் அதன் பின்னரான அழிவு யுத்தத்திலும் இதுவரை போராளிகள் முதற்கொண்டு பொதுமக்கள் வரை எண்ணற்ற உயிர்களை நாம் இழந்திருக்கின்றோம்.

அதனால் எமது மக்களின் ஒவ்வொரு இல்லங்கள் தோறும் இழப்புகளின் துயரங்கள் இருந்து வருகின்றன. அந்த வகையில் இறந்த உறவுகளை நினைவேந்துவது ஒவ்வொரு சாதாரண குடிமக்களதும் ஆழ்மன விருப்பங்களாகும் என்பதுடன் அது அந்தக் குடிமக்களின் ஜனநாயக உரிமையுமாகும் என கடற்றொழில் நீரியல் வள மூலதன அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சக போராளிகளினதும் பொதுமக்களினதும் இறப்புக்கள் நிகழ்ந்த போது அதை வைத்து அரசியல் ஆதாயம் தேடலாம் என ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தவர்களே இன்று உறவுகளை நினைவேந்தும் நிகழ்வுகளில் கூடி நிற்கின்றார்கள். இவர்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அமைதியானதும் சமாதானமானதுமான முறையில் மக்கள் அனுஷ்டிக்கும் நினைவேந்தலை துஷ்பிரயோகம் செய்து அதில் அரசியல் ஆதாயம் தேட அவர்கள் முற்படுவார்கள்.

இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு எமது மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என நம்புகின்றோம்.

அரசியல் துஷ்பிரயோகங்கள் இன்றி இறந்த உயிர்களை தமது ஆழ்மனங்களில் நினைவேந்தி அஞ்சலி செலுத்தும் எமது மக்களின் உரிமையை யாரும் தடுக்க மாட்டார்கள்.

மக்களின் உணர்வுகளுக்கும் ஆழ்மன விருப்பங்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் என்றும் மதிப்பளிப்போம்.

இறந்து போன அனைத்து உயிர்களையும் நெஞ்சில் நினைவேந்தி அஞ்சலி மரியாதை செலுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


### விற்பனைக்கு

கிருஸ்ணபுரம் கிளிநொச்சியில் நன்கு தேர்வு செய்து உற்பத்தி செய்த நல் இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.

விலை 90/=

மொத்த விலை 80/=

இரு சில்லு உழவு இயந்திர (குபோட்டா) வீலும், பிளவு கலப்பையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 330 1798

(C-8350)


# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் ஒருவர் பலி

## இரு பொலிஸார் உட்பட மூவர் படுகாயம்

(கல்முனை)

மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள கல்லடி பிரதேசத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் இரு பொலிஸார் உட்பட மூவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கல்லடி வேலூர் 4 ம் குறுக்கு காளிகோவில் வீதியைச் சேர்ந்த மீன் வியாபாரியான 61 வயதுடைய சவுந்தரராஜன் என்பவரே உயிரிழந்தார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பதில் பொலிஸ் அதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகிய இருவரும் சம்பவதினமான நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் கடமை நிமித்தமாக காத்தான்குடி பகுதியிலிருந்து மட்டக்களப்பை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கல்லடி இலங்கை வங்கிக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்ட வீதி வளைவு பகுதியில் இடதுபக்கத்தில் இருந்து திடீரென வலதுபக்கம் வீதி வளைவு பகுதிக்கு சம்பவத்தில் உயிரிழந்தவர் அவரது மகனுடன் மோட்டார் சைக்கிளை திருப்பும்போது எதிரே வந்த பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

இதில் படுகாயமடைந்த சிறுவன் மற்றும் பொலிஸார் உட்பட 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை இடம்பெற்று வருகின்றதுடன் உயிரிழந்தவரின் சடலம் மட்டு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## 60 ஆவது அகவையில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

### திருமதி.சுகுமாரி சண்முகலிங்கம்



**சேவை விபரம்**

க/கலஹா த.ம. வித்தியாலயம்
1985.07.16-1988.02.14
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
1988.02.15-1989.12.31
க/கலஹா த.ம. வித்தியாலயம்
1990.01.01-1990.02.05
மு/ யோகபுரம் மகா வித்தியாலயம்
1990.02.06-1995-01.10
யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்
1995.01.11-2003.12.31
யா/நல்லூர் இ.த.பெ.பாடசாலை
2004.01.01-2011.06.13
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
2011.06.14-2019.10.29

எமது பாடசாலையில் 2011.06.14 இல் இருந்து 2019.10.29 வரை சேவையாற்றி 60 ஆவது அகவையில் ஓய்வுபெறும் திருமதி **சுகுமாரி சண்முகலிங்கம்** அவர்களை வாழ்த்தி ஓய்வுக்காலத்தில் சிறப்புடனும் மகிழ்வுடனும் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

(1302)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மருதலிங்கம் கவிசாளினி



2019ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவி. **மருதலிங்கம் கவிசாளினி** 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அ.அபிநயா-134, சோ.லியான்கன்-120, ச.சானுஜா-113, ர.விதுசன்-101, பி.பிரியங்கன்-100 ஆகிய மாணவர்களையும் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 12 மாணவர்களையும் அவர்களின் வெற்றிக்கு வழிசமைத்த பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/முக்கொம்பன் ம.வி.

(1301)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 59 செவ் 1 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:B.Com, Accountant
எதிர்பார்ப்பு:வெளிநாடு குடியுரிமைபெண்
தொ.இ: B/2452

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 25 ¼
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:Management, Manager, London
எதிர்பார்ப்பு: A/L படித்தபெண்
தொ.இ: B/2464

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4 செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L,சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: A/L படித்தபெண்
தொ.இ: B/2483

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விருட்சிகம் 2
கி.பா: 20 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்O/L,கட்டடபகுதி நிர்மாணிப்பாளர்
தொ.இ: B/2486

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 16 ¼
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர்
தொ.இ: G/4840

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: சூரி செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BAபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4846


பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 11 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Computer Engineer, Lecturer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, உள்நாடு
தொ.இ: G/4847

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 50 செவ் 2 இல்
தகைமை/தொழில்:B.E பட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச,தனியார் தொழில்
தொ.இ: G/4854

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தடைகளைத் தாண்டி யாழ்.பல்கலையில்

# மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு























(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பதற்கு நிர்வாகம் விதித்த தடையையும் தாண்டி நேற்று மாணவர்களால் மாவீரர் நாள் பல்கலைக்கழக வளாகத்தினுள் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அக வணக்கத்தைத் தொடர்ந்து மாவீரர்களின் தியாகம் பற்றி யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் மாவீரர்கள் இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள், அவர்களின் மரணம் சரித்திரத்தையே இயக்கவல்லது. எமது விடுதலைக்கான வீர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டதோடு எமது மாபெரும் விடுதலை எழுச்சிக்கும் வித்திட்டது.

சுயநலமற்ற வாழ்க்கையின் துணிச்சலான அவர்களின் குணம் மனிதப் பிறவியில் அபூர்வமானது. அதனால்தான் விடுதலைக்காக மரணித்த மறவர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-10)

# வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்குள் அனுமதித்து விசாரணைகளை நடத்த ஜனாதிபதி தயாரில்லை

## அமைச்சர் தினேஷ் திட்டவட்டம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அங்கீகரித்த பிரேரணையை மீண்டும் கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தி பிரேரணைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் கையாளவுள்ளதுடன் அடுத்த இருவாரங்களில் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக அரச தரப்பு தெரிவித்தது.

இதேவேளை சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்குள் அனுமதித்து விசாரணைகளை நடத்த ஜனாதிபதி தயாரில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

போர்க்குற்றங்கள் குறித்த பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னைய அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் ஏற்றுக்கொண்ட விடயங்களை புதிய அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சை பொறுப்பேற்ற தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்நிலையில் இடைக்கால அரசாங்கத்தின் கால எல்லைக்குள் இது குறித்து அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் என்னவென வினவிய போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில், அதாவது 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஜெனிவாவில் முன்னெடுத்த நகர்வுகள் முற்றிலும் தவறானதாகும்.

இது ஏற்றுகொள்ளக் முடியாதவை என நாம் தொடர்ச்சியாக கூறி வந்துள்ளோம்.

போர்க்குற்றங்களை நிரூபிக்க எந்த ஆதாரங்களும் இல்லாது வெறுமனே ஒரு சிலர் கூறும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்வதை போலவே கடந்த 2015 ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடரின் 30/1 பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது.

இது இலங்கை அரசாங்கம் வழங்கியது என கூறுவதை விடவும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் தனிப்பட்ட தீர்மானம் என்றே கூறமுடியும்.

அமைச்சரவை அங்கீகாரம் இல்லாது, பாராளுமன்றத்தில் இது குறித்த அனுமதியை பெற்றுக்கொள்ளாது தாமாக இணை அனுசரணை பிரேரணையை ஆதரித்தனர்.

எனினும் நாம் மீண்டும் இதனை பரிசீலிக்கவுள்ளோம். வெகு விரைவில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் மீண்டும் கலந்துரையாடி இலங்கை அரசாங்கம் அங்கீகரித்த பிரேரணை தொடர்பில் கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தி அதனை நீக்குவதற்காக சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணில் தலைமைப் பதவியை சஜித்திற்கு வழங்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

(ஹற்றன்)

ஜனநாயகத்தை மதிக்கின்ற முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் ஜனநாயக தீர்ப்புக்கு மதிப்பளித்து எதிர்கால ஐக்கிய தேசிய கட்சியின் நன்மை கருதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பதவியையும் எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் சஜித் பிரேமதாஸவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்பு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதை நாங்கள் அறிகின்றோம்.

இதற்கு ஒரே காரணமாக



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருப்பதே தெரிகின்றது. எனவே அவர் கடந்த பல வருடங்களாக பல்வேறு அர்ப்பணிப்புக்களைச் செய்து பல விட்டுக்கொடுப்புக்களுக்கு மத்தியில் கட்டிக்காத்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது.

கட்சியின் எதிர்கால நலன் கருதி கட்சியை ஒன்றிணைத்து அதனை முன்னெடுப்பதற்கு சஜித் பிரேமதாஸவிற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து திடமான எதிர்க்கட்சி தலைவராகவும் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியை பொறுத்தவரையில் நாங்கள் கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டது போல எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடனே இணைந்து செயற்பட தீர்மானித்திருக்கின்றோம்.


அந்தவகையில் நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளுடன் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றியடைய செய்வதற்கு முழுமையாக பாடுபடுவோம்.

எங்களைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

எனவே அந்த மக்களின் நலன் கருதி செயற்பட வேண்டும். அதற்காக சஜித் பிரேமதாஸ முழுமையாகச் செயற்படுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

வெறுமனே அரசாங்கத்தின் எல்லா விடயங்களையும் விமர்சனம் செய்யாது மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளித்து ஒத்துழைப்பு வழங்க எதிர்க்கட்சி என்ற வகையில் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிட்னியிலும் உணர்வுபூர்வமாக மாவீரர் நாள் அனுஷ்டிப்பு!



(சிட்னி)

மாவீரர் நாள் நினைவுகூரல் நிகழ்வுகள் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுப் புதன்கிழமை காலை மாவீரர் எழில் கண்ணனின் பெற்றோர் பிரதான ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் பலரும் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (இ-7)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## பெறுகை அறிவித்தல்

### 2020ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு,பாதுகாப்பு,சாரதி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 2020ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service), காவற்கடமை, சாரதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | சாரதி உதவியாளர் | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | 09 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

1) சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவையை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 28.11.2019 தொடக்கம் 12.12.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.2500.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4) பெறுகை ஆவணங்கள் 13.12.2019 ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

C 8353

# விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி





(பனிக்கன்குளம்)
ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 பொதுமக்களது 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆயை முன்றலில் இடம்பெற்றது.

வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களது உறவுகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்,புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செல்லையா பிரேமகாந், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ .சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தாக்குதலில் உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் உறவினர்கள் முதலில் பொதுச் சுடர் ஏற்றியதை தொடர்ந்து அனைத்து உறவுகளுக்கும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (9-281)

# முதிரைக் குற்றிகளுடன் பூநகரியில் இருவர் கைது

(பரந்தன்)
கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் சட்டத்திற்கு முரணாக பெறுமதிவாய்ந்த முதிரைக் குற்றிகளை அரிந்து சங்குப்பிட்டி பாலத்தின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு கடத்த முற்பட்ட நபர் இருவர் பூநகரிப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ள துடன் ஹன்டர் வாகனம் மற்றும் மரக் குற்றிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பூநகரிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கடத்த முற்பட்ட மரக்குற்றிகளையே பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதுடன் இக் குற்றிகள் சுமார் 3 இலட்சம் பெறுமதிவாய்ந்தவை என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வாகனத்தின் சாரதி மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-312)

# "பேரும் ஊரும்" நூல் வெளியீடு

(நெளுக்குளம்)
வவுனியாவை சேர்ந்த ஞா.ஜெகநாதன் எழுதிய பேரும் ஊரும் எனும் நூல் வெளியீடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பிரதேச செயலாளர் கா. உதயராசா, கௌரவ விருந்தினர்களாக திருமதி மைதிலி தயாபரன், தமிழ்நிதி அருணா செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(9-299)




# இலங்கை இரு நாடுகளாக பயணிக்க சர்வதேசம் இடம் தரவேண்டும்

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)
இந்தத் தேசம் இரண்டாக பிரிந்து இரண்டு நாடுகள் என்ற பாதையினை நோக்கி பயணிப்பதற்கு சர்வதேச நாடுகள் இடம்தர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் விமானத் தாக்குதலில் உயிரிழந்த மக்களின் 29 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு நாடு தன்னுடைய நாட்டு மக்களுக்கு எதிராகவே விமானங்களை பாவித்து தாக்குதல் நடத்திய வரலாறு. இது 1990 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இவ்வளவு காலமும் நடைபெற்ற அத்தனை அநியாயங்களும் தமிழினம் என்பதற்காக அவர்கள் மேல் ஒரு சிங்கள தேசம் சிங்கள இராணுவத்தை வைத்து நடத்தி முடித்த அடாவடித்தனங்களுக்கு இது ஒரு வரலாற்று சான்று. எனவேதான் இதனை நாங்கள் நினைவிற்கொள்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தினீர்கள். ஒஸ்லோவில் அவர்களுடன் ஒரே மேசையில் பேச்சு நடத்தினீர்கள். எனவே நீங்கள் தமிழர்களின் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளையும் சிங்கள தேசத்தின் பிரதிநிதிகளாக சிங்கள அரசினையும் ஏற்றுக்கொண்டு தான் இந்த பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பது மறக்க முடியாத உண்மை. இவ்வாறு இதில் நீங்கள் சம்பந்தப்பட்டு விட்டு இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரினை உச்சரித்தால் அவர்களின் அடையாளங்களை சொன்னால் நாங்கள் மிரட்டப்படுகின்றோம்.

ஒரு புதிய அரசு இன்று ஆட்சியினை ஏற்றிருக்கின்றது. உங்கள் அடாவடித்தனங்கள் வெளியில் வந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு பல இழப்புக்களை சந்தித்த எமது இனத்திடம் நீங்கள் அனைத்தினையும் மறந்துவிட்டு வாருங்கள் என்று ஒற்றை வார்த்தையில் சொல்கின்றார்கள்.

எந்தவிடயத்திற்காக இந்த யுத்தம் நடைபெற்றது என்பதை நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டும்.மீண்டும் இந்த விடயங்கள் நடைபெறாமல் இருக்க உறுதிப்படுத்த வேண்டும்.ஒருபோரின் முடிவில் அநியாயமாக பல கொலைகளை செய்துள்ளீர்கள். அனைத்தும் மூடி மறைக்கப்பட்டு விட்டது என்பது தான் உண்மை.

இந்தத்தேசம் இரண்டாக பிரிந்து இரண்டு நாடுகள் என்ற பாதையினை நோக்கி பயணிப்பதற்கு சார்வதேச நாடுகள் இடம் தர வேண்டும்.ஏனென்றால் சர்வதேசம் தான் சமாதான பேச்சு வார்த்தை என்ற போர்வையில் ஈழ விடுதலைப்போராட்டத்தினை முள்ளிவாய்க்கால் வரை முடிவிற்கு கொண்டுவந்தவர்கள் உங்களுக்கு அந்தப் பொறுப்பு இருக்கின்றது என்று கொள்ளலாம்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பது பகிரங்கமான உண்மை. இந்த உண்மையினை ஏற்றுக்கொண்டு இந்த மக்களுக்காக சர்வதேச நாடுகள் அனைத்தும்சேர்ந்து ஐ.நா. சபையின் ஊடாக ஒரு தீர்விற்கு வரவேண்டும்.

மாவீரர்தின நாளில் கூட இந்த அரசினால் பல்வேறு வகையான அடக்குமுறைகள் எம்மீது திணிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் தமிழர்களின் பிரதிநிதிகள். அதில் இருந்து மக்கள் பிரிந்து விடக்கூடாது. அவர்கள் வீசும் பணத்திற்கும் சலுகைக்கும் அடிபணியாமல் மக்கள் அனைவரும் தமிழர்களாக ஒன்றாக இருக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-281)

# குளங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் சிறுவர்களை குளங்களுக்கு அனுப்பவேண்டாம்

## முல்லை. நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

(அக்கராயன்)
குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருவதன் காரணமாக சிறுவர்களை குளங்களில் சென்று நீராட வேண்டாம் என முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குளங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது புதிய குழிகள் உருவாக்கப்பட்டு அதில் தற்போது நீர் நிறைந்து இருப்பதன் காரணமாக குளங்களை நோக்கிச் செல்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் பாடசாலை முடிந்தவுடன் பெற்றோர்களுக்குத் தெரியாமல் குளங்களில் சென்று நீராடி கடந்த காலங்களில் உயிர் அபத்துகளை எதிர் கொண்ட நிலையில் தற்போது மழை காரணமாக குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருவதன் காரணமாக பெரியவர்களின் துணையின்றி சிறுவர்கள் குளங்களுக்கோ மற்றும் நீர் நிலைகளுக்கோ செல்ல வேண்டாம் எனவும் முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி சுகாதாரத் திணைக்களம் வீடுகள் அமைப்பதற்காக சூழலில் அமைக்கப்பட்டுள்ள குழிகளில் நீர் நிறைந்து இருப்பதன் காரணமாக சிறுவர்கள் அக்குழிகளில் விழக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதன் காரணமாக வீட்டின் உரிமையாளர்கள் குழிகளை மூடி தேவையற்ற நீர் நிலைகளை பாதுகாப்பான சூழலாக மாற்றுவதுடன் சிறுவர்களுக்கும் நீர் நிலைகளின் அபாயம் தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும்படி மேலும் தெரிவித்துள்ளனர். (9-350)

# நாயின் தோல் கண்டுபிடிப்பு

## இறைச்சிக்காக வெட்டப்பட்டிருக்கலாம் என பொதுமக்கள் சந்தேகம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக உள்ள வியாபார நிலையம் ஒன்றின் முன்பாக இறைச்சி அகற்றப்பட்ட நிலையில் நாய் ஒன்றின் தோல் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறைச்சிக்காக விலங்குகள் வெட்டப்பட்டு இறைச்சி பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் அதன் தோல் எவ்வாறு காணப்படுமோ அவ்வாறே நாயின் முகம் மற்றும் கால் ஒன்றுடன் தோல் காணப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக பொதுச்சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்து சோதனை மேற்கொண்டனர்.

இறைச்சிக்காக குட்டி நாய் வெட்டப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டிருந்த நிலையில் , சோதனை நடத்திய பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இது இறைச்சி அகற்றப்பட்ட நாயின் தோல் என உறுதிப்படுத்தியதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவித்தனர். (9-350)

# பெரும்பான்மை குறைந்த அரசாங்கம்

# மக்களால் நிராகரிக்கப்படும்

## முன்னாள் அமைச்சர் ரிஷாட் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**பெரும்பான்மை குறைந்த புதிய அரசாங்கம் இன்னும் ஐந்து மாதத்திலே மக்களால் நிராகரிக்கப்படும் என முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**



வவுனியா மதீனாநகர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நமக்கேற்ற தலைவரை உருவாக்குவதற்காகவே சிறுபான்மை சமூகம்,நாம் ஏன் ஒன்றுபட்டோம் இத்தேர்தலிலே் நாம் எதிர்பாராத தோல்வியை அடைந்தாலும் இதிலிருந்து நாங்கள் எங்களையும், மக்களையும் எமது பிரதேசத்தையும், நாட்டையும் காப்பாற்றலாம் என்ற திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

ஐந்து மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை விட முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் இருக்கின்றது. புதிதாக இருக்கின்ற ஜனாதிபதியை பொறுத்தவரையிலே அரசியல் அமைப்பின் 19ஆவது திருத்தின் பிரகாரம் ஜனாதிபதியாக இருக்க முடியுமே தவிர ஒரு அமைச்சை கூட வைத்திருக்க முடியாது.

இந்தத் தேர்தலிலே தோல்வியடைந்தாலும் கூட வரவிருக்கின்ற பிரதமரை, அமைச்சர்களை தெரிவு செய்கின்ற தேர்தலிலே சிங்கள, இந்து, கத்தோலிக்க.இஸ்லாமிய, மலையக மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு சஜித் பிரேமதாஸவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி அவரை பிரதமராக தெரிவு செய்கின்ற முயற்சியிலே இறங்கியிருக்கிறோம்.

ஏப்ரல் இறுதியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் வரை எந்தவொரு தடையும் இல்லாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களான நாங்களும் இருந்திருக்க முடியும். புதிய அரசாங்கத்திற்கு மக்கள் கொடுத்த ஆணையை மதித்து எங்களுடைய அமைச்சுப்பதவிகளை இராஜினாமா செய்திருக்கிறோம்.

மேலும் அரசாங்கம் என்ற வகையில் ஒரு இனத்திற்கோ, மதத்திற்கோ செயற்பட முடியாது. எந்தப் பாகுபாடுமின்றி குறிப்பாக வடக்கு- கிழக்கு மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். இம்மக்கள் இழப்பதற்கு ஏதுமே இல்லை.

இம்மக்களிற்கும் பெரும்பான்மை குறைந்த அரசாங்கத்தினால் குறுகிய காலத்திலே மேற்கொள்ளப்படும் பணிகளிலே எந்த பேதமின்றி எல்லோருக்கும் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்த பெரும்பான்மை குறைந்த அரசாங்கம் இன்னும் ஐந்து மாதத்திலே மக்களால் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படைப்புழுவின் பாதிப்பு இனங்காணப்பட்டு அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போதைய காலபோகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோளப்பயிர்ச்செய்கைகளில் படைப்புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 16 ஹெக்டேயரளவில் சோளப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த கால போகத்தின் போது படைப்புழுவினால் சோளம் மற்றும் ஏனைய பயிர்களிலும் குறிப்பிட்டளவு பாதிப்பு ஏற்பட்டு எமது திணைக்களத்தின் தொடர் நடவடிக்கைகளால் படைப்புழுவின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய காலபோகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோளச் செய்கையில் மாணிக்கபுரம், வள்ளுவர்புரம் போன்ற இடங்களில் படைப்புழுவின் தாக்கம் சிறிய அளவிலே அடையாளம் காணப்பட்டு அதற்கான தொடர் நடவடிக்கைகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (9-315)

# மரம் நடுகை



(முரசுமோட்டை)

வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் "வனநோபா" மர நடுகை நிகழ்ச்சி திட்டத்தில் கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தினால் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நேற்று முன்தினம் மரங்கள் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.எம். சுபைர், கிளிநொச்சி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.முத்துகுமார்,கூட்டுறவுத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் உ.ஜெந்தப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர். (9-318)



**நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானத்தை வலியுறுத்திய யாழ்ப்பாணம் முதல் கதிர்காமம் வரை இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் நேற்று வவுனியாவை சென்றடைந்தது. யாழ்ப்பாணம் நயினாதீவில் அமைந்துள்ள நாக விகாரையில் ஆரம்பிக்கப்பட்ட நடை பயணத்தின் நான்காம் நாளான நேற்று வவுனியாவுக்கு சென்று தொடர்ந்து மதவாச்சியை சென்றடைந்தது. (படம்: நெளுக்குளம் செய்தியாளர்)**

# கண்டாவளை பிரதேச பண்பாட்டு பெருவிழா

(முரசுமொட்டை)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத் தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலார் த.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன்,கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர்(காணி) ந.திருலிங்கநாதன், கிளிநொச்சி மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சி.சுஜீவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நூல் வெளியீடு, சமூக நாடகம்,காத்தவராயன் கூத்து, பரத நாட்டியம் என்பன இடம்பெறவுள்ளன . (9-318)




# முல்லைத்தீவிலுள்ள கிராமங்களில் கடலுணவுக்கு தட்டுப்பாடு

## கடற்றொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவுக் கடலில் பிடிக்கப்படுகின்ற கடல் உணவுகள் மாவட்டத்தின் கிராமங்களைச் சென்றடைவதில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படுகின்ற கடல் உணவுகள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணமாக கிராமங்களுக்கு கடல் உணவுகள் சென்றடைவதில்லை எனவும் இதன் காரணமாக ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் மக்கள் கடல் உணவுகளைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

கடல் உணவுகளை கொண்டு வருகின்ற சில வியாபாரிகளும் கூடுதல் விலைகளில் கிராமங்களில் விற்பனை செய்வதால் ஒழுங்காக கடல் உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் முல்லைத்தீவு கடல் உணவுகள் கிராமங்களைச் சென்றடைவதில்லை என்ற முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக அந்நிலைமை தொடர்வதாக பொது மக்கள்சுட்டிக்காட்டியுள்ளனர். (9-350)

# நல்லிணக்க கலந்துரையாடல்





(குருமன்காடு)

சமயங்கள் மற்றும் இன முரண்பாடுகளை இணக்கப்பாட்டின் மூலம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருளில் சமூகமட்ட அமைப்புக்கள் மூலம் மக்களை வழிப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா குருமன்காடு தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் இன முரண்பாடுகள் மற்றும் நல்லிணக்கங்கள் இதேவேளை சமீப காலங்களில் இடம் பெற்று வரும் அதிகார முரண்பாடுகள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

குறித்த ஒன்றுகூடலில் மதத் தலைவர்கள்,வவுனியா மாவட்ட சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# பாரதம்

## மஹாராஷ்டிராவில் ஆட்சியமைப்பதிலிருந்து பா.ஜ.கவை பின்வாங்க வைத்தது உச்ச நீதிமன்றம்

(டில்லி )

மஹாராஷ்டிரா அரசியலில் உச்சநீதிமன்று பிறப்பித்த உத்தரவு ஆட்சி அமைப்பதில் இருந்து பா.ஜ.கவை பின்வாங்க வைத்தது.

மஹாராஷ்டிரா மாநில சட்டசபை தேர்தலில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பா.ஜனதா, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சிகளால் ஆட்சி அமைக்க இயலாத நிலையில், அங்கு 12 ஆம் திகதி ஜனாதிபதி ஆட்சி அமுலானது.

தேர்தலின்போது பா.ஜனதாவுடன் கூட்டணி அமைத்திருந்த சிவசேனா, தேர்தலுக்கு பின்னர் முதலமைச்சர் பதவி போட்டி, அமைச்சரவையில் 50 சதவீத இடம் ஆகிய பிரச்சினைகளால் அந்தக் கூட்டணியில் இருந்து வெளியேறியது.

அந்தக்கட்சி, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகளுடன் சேர்ந்து புதிய கூட்டணி அமைத்து. ஆட்சியமைக்க முயற்சித்தது. அதில் உடன்பாடு ஏற்பட்டு, உத்தவ் தாக்கரே தலைமையில் புதிய அரசு பதவி ஏற்கும் என தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் 22 ஆம் திகதி இரவு அறிவித்தார்.

ஆனால் அதிரடியாக இரவோடு இரவாக, 105 இடங்களைக் கொண்ட பாரதீய ஜனதா கட்சி, 54 இடங்களை பிடித்த தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சட்டசபை கட்சித் தலைவரான அஜித்பவாருடன் சேர்ந்து, ஆட்சி அமைக்க ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரியிடம் உரிமை கோரியதை தொடர்ந்து, ஜனாதிபதி ஆட்சி 23 ஆம் திகதி அதிகாலையில் ரத்து ஆனது.

இதைத்தொடர்ந்து, ஆளுநர் விடுத்த அழைப்பை ஏற்று பாரதீய ஜனதாவின் தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகவும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சட்டசபை கட்சித் தலைவர் அஜித் பவார் துணை முதலமைச்சராகவும் பதவி ஏற்றனர். 30 ஆம் திகதிக்குள் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு தேவேந்திர பட்னாவிசுக்கு ஆளுநர் 'கெடு' விதித்தார்.

ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தேவேந்திர பட்னாவிஸ் அரசு சட்டசபையை உடனடியாக கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்குமாறு உத்தர விடவேண்டும் என்றும் கோரி சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகள் சார்பில் உச்ச நீதி மன்றில் 'ரிட்' மனுத் தாக்கல் செய்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, இந்த வழக்கை அவசர வழக்காக சிரேஷ்ட நீதிபதிகள் என்.வி.ரமணா, அசோக் பூஷண், சஞ்சய் கன்னா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. முடிவில், ஜனாதிபதி ஆட்சியை இரத்து செய் யுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தும், தேவேந்திர பட்னாவிஸ் புதிய அரசு அமைக்க அழைப்பு விடுத்தும் ஆளுநர் எழுதிய கடிதங்களை கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யுமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) காலை வழக்கு, நீதிபதி என்.வி. ரமணா அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. ஏற்கனவே பிறப்பித்த உத்தரவின்படி, ஆளுநரின் கடிதங்களை சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா தாக்கல் செய்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட மூத்த நீதிபதி என்.வி.ரமணா அமர்வு, இந்த வழக்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பிக்கப்படும் என அறிவித்தது.

அதன்படி நேற்று முன்தினம் காலை, நீதிபதி என்.வி.ரமணா அமர்வு, "தேவேந்திர பட்னா விஸ் அரசு நேற்று புதன்கிழமை சட்டசபையை கூட்டி, நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்" என அதிரடியாக உத்தரவு பிறப்பி த்தது.

நம்பிக்கை வாக்கெடுப்பை தாமதப்படுத்தினால், அது குதிரை பேரத்துக்கு வழிநடத்துவதற்கு வாய்ப்பு உண்டு என நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கருத்து தெரிவித்திருந்த நிலையில் மராட்டிய முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தனது பதவியை இராஜினாமா செய்தார். பா.ஜ.கவின் அரசியல் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. சிவசேனா கூட்டணி ஆட்சி ஏற்பட வழிவகை ஏற்பட்டது. (ஜ-2)

## மஹாராஷ்டிரா தேர்தலில் வெற்றி பெற்ற புதிய எம்.எல்.ஏக்கள் நேற்று பதவியேற்பு



(மும்பை)

மஹாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக்கொண்டனர். 288 உறுப்பினர்கள் கொண்ட மகாராஷ்டிரா சட்டசபைக்கு கடந்த மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. 24 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

ஆளுங்கட்சியாக இருந்த பா.ஜ.க. 105 தொகுதிகளிலும் அதன் கூட்டணி கட்சியான சிவசேனா 56 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. தேசியவாத காங்கிரஸ் 54 இடங்களிலும் காங்கிரஸ் 44 இடங்களிலும் வெற்றி பெற்றன. எந்தக் கட்சியாலும் ஆட்சியமைக்க முடியாத நிலையில் ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது.

பின்னர் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அஜித் பவார் ஆதரவுடன் பா.ஜ.க. ஆட்சியமைத்தது. இந்த அரசு நவம்பர் 27 ஆம் திகதி (நேற்று) பெரும்பான்மையை நிரூபிக்கும்படி உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது. காலையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவி யேற்பு நிகழ்ச்சியை முடித்து விட்டு மாலை 5 மணிக்குள் பா.ஜ.க. அரசு பெரும் பான்மையை நிரூபிக்க வேண்டும் எனக் கூறியது.

ஆனால், பா.ஜ.கவுக்கு போதிய பெரும்பான்மை இல்லாததால் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர் கொள்ள விரும்பவில்லை. நீதிமன்றம் உத்தரவிட்ட சில மணி நேரங்களில் முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிசும், துணை முதலமைச்சர் அஜித் பவாரும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

அதன்பின்னர் மஹாராஷ்டிரா மாநில சட்டசபையின் இடைக்கால சபாநாயகராக பா.ஜ.கவை சேர்ந்த காளிதாஸ் கோலம்ப்கர் தேர்வு செய்யப்பட்டார். ஆளுநர் பகத்சிங் கோஷ்யாரி அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதையடுத்து, புதன்கிழமை (நவ.27) காலை 8 மணிக்கு மகாராஷ்டிரா சட்டசபை கூடும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி நேற்றுக் காலை சட்ட சபை கூடியது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கிடைக்கால சபாநாயகர் காளிதாஸ் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியை இராஜினாமா செய்த தேவேந்திர பட்னாவிஸ், அஜித் பவார் மற்றும் பிருத்விராஜ் சவுகான் உள்ளிட்டோர் எம்.எல்.ஏக்களாக பதவியேற்றனர். தேர்தல் முடிந்து ஒரு மாதம் கடந்த நிலையில் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றனர். (ஜ-2)

## அல்பேனியாவில் சக்தி... உயிரிழந்தோர் எண்ணி...



## பிரான்ஸ் நாட்டு ... நேருக்கு நேர் மோத...

(பமாகோ)

மாலி நாட்டில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பிரான்ஸ் நாட்டு 2 இராணுவ ஹெலிகொப்டர்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 13 வீரர்கள் உயிரிழந்தனர்.

மாலி நாட்டின் வடக்கு பகுதியை அல்கொய்தா மற்றும் ஐ.எஸ்.போன்ற பயங்கரவாதக் குழுக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு தங்கள் கைவசம் கொண்டு வந்தன.

அவர்களை பிரான்ஸ் தலைமையிலான இராணுவத்தினர் விரட்டியடித்தனர். ஆனாலும் ஏனைய பகுதிகளில் அவர்கள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இந்த பயங்கரவாதக் குழுக்களை முற்றிலும் ஒழிக்க பிரான்ஸ், உள்நாட்டு இராணுவத்துடன் இணைந்து அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு எல்லையோரப்பகுதியில் பிரான்ஸ் இராணுவ வீரர்கள் இரு ஹெலிகொப்டர்களில் பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக இரண்டு ஹெலிகொப்டர்களும் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த பிரான்ஸ் இராணுவ வீரர்கள் 13 பேர் உயிரி

## ஹமாஸ் தீவிரவாதிகளின் ... தளங்கள் மீது இஸ்ரேல் ...

(காசா)

காசாவில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகளின் இராணுவத் தளங்கள்மீது இஸ்ரேல்படையினர் வான்வழித் தாக்குதல் நடத்தினர்.

காசாவிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக நேற்று புதன்கிழமை ஹமாஸ் தீவிரவாதிகளின் இராணுவத் தளங் கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத் தரப்பு தெரிவித்தது. இஸ்ரேலின் இந்தத் தாக்குதலில் ஹமாஸ் தீவிரவாதிகளின் இரு தளங்கள் தாக்கப்பட்டதாகவும், இதில் காயமடைந்தவர்கள் குறித்த தகவல் தெரியவரவில்லை என்றும் காசா அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஹொங்கொங் விமான நி... போதைப் பொருட்கள் ...

### சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

(கின்சாஸா)

ஹொங்கொங்கில் இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் 42 கிலோகிராம் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றின் மொத்த மதிப்பு சுமார் 3.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த இரண்டு கடத்தல் சம்பவங்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

முதல் சம்பவத்தில், விமா னம் மூலம் மலேசியாவிலிருந்து ஜப்பான் வழியாக ஹொங்கொங்கிற்கு வந்த 5 தொலைக் காட்சிப் பெட்டிகளில் 27.5 கிலோ கிராம்

# வெளிநாடு

## திவாய்ந்த நிலநடுக்கம்; ணிக்கை 24ஆக உயர்வு



(திரானா)

அல்பேனியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

அல்பேனியா தலைநகர் திரானாவிலிருந்து சுமார் 18 மைல்கள் தூரம் உள்ள ஷிஜக் நகரில் நேற்று அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆகப் பதிவாகியது.

இந்த நிலநடுக்கம் அல்பேனியாவில் கணிசமான அளவிலான பாதிப்பை ஏற்படுத்தியது.

குறித்த நிலநடுக்கம் காரணமாக நூற்றுக்கணக்கானோர் காயமடைந்த நிலையில் 24 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நிலநடுக்கம் காரணமாக பல இடங்களில் வீடுகள் மற்றும் வீதிகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர், இதேவேளை மீட்புப் பணிகள் நடந்து வருவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஜ-2)

## பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்து; 10 கடற்படை வீரர்கள் ஸ்தலத்தில் பலி!




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்த விபத்தில் சிக்கி 10 கடற்படை வீரர்கள் பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் குவாலியர் மாவட்டத்தில் இருந்து கடற்படை வீரர்களை ஏற்றிக் கொண்டு கராச்சி நோக்கி ஒரு பேருந்து சென்று கொண்டிருந்தது.

லாஸ்பெலா பகுதியில் உள்ள போஜி டாப் இடத்தின் அருகில் வரும்போது பேருந்தின் பிரேக் பிடிக்கவில்லை. இதனால் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்தது.

இந்த விபத்தில் அதில் பயணித்த 10 கடற்படை வீரர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு விரைந்து வந்த மீட்புக் குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

## ஹெலிகொப்டர்கள் ாதல்-13 வீரர்கள் பலி



ழுந்தனர்.

இதற்கிடையில், ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் இரங்கல் தெரிவித்தார். (ஜ-2)

## பனிச் சிற்பம் உடைந்து விழுந்ததில் 2 வயதுக் குழந்தை உடல் நசுங்கிப் பலி



(லக்சம்பர்க்)

ஐரோப்பிய நாட்டில் பனி சிற்பம் திடீரென உடைந்து, அதன் அருகில் நின்று கொண்டிருந்த 2 வயது ஆண் குழந்தையின் மீது விழுந்தது. இதில் அந்தக் குழந்தை உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தது.

கிறிஸ்மஸ் பண்டிகை அடுத்த மாதம் 25 ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இப்போதில் இருந்தே கிறிஸ்மஸ் பண்டிகைக்கு தயாராகி வருகின்றனர்.

அந்த வகையில் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான லக்சம்பர்க்கில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி சிறப்பு சந்தைகள் உருவாக்கப்பட்டு கிறிஸ்மஸ் மரம் உள்ளிட்ட அலங்காரப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் தலைநகர் லக்சம்பர்க்கில் உள்ள சந்தையில் நேற்று முன்தினம் இரவு ஏராளமான மக்கள் பண்டிகைக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். அப்போது, சந்தையில் பார்வையாளர்களை கவருவதற்காக வைக்கப்பட்டிருந்த பனி சிற்பம் திடீரென உடைந்து, அதன் அருகில் நின்று கொண்டிருந்த 2 வயது ஆண் குழந்தையின் மீது விழுந்தது. இதில் அந்தக் குழந்தை உடல் நசுங்கிப் பரிதாபமாக இறந்தது. இந்தப்பனி சிற்பத்தை உருவாக்கிய பிரான்சை சேர்ந்த சிற்பியிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

## ளின் இராணுவ ரேல் தாக்குதல்

இருவாரங்களுக்கு முன்னர் இஸ்ரேல்- பாலஸ்தீன எல்லைப் புறத்தில் காசா பகுதியில் இரண்டு நாட்களாக இஸ்லாமிக் ஜிகாத் தீவிரவாத அமைப் புக்கும் இஸ்ரேல் படைகளுக்குழ் இடையே சண்டை நடந்தது. இதில் பாலஸ் தீன தீவிரவாதக் குழுவின் முக்கிய தளபதியான பஹா அபு அல் அட்டா கொல்லப்பட்டார்.

மேலும், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 34 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து போர் நிறுத்தம் அங்கு அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் காசா பகுதியில் மீண்டும் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல். (ஜ-2)

## ன நிலையத்தில் கள் பறிமுதல்

போதைப்பொருள் இருந்தது.

இரண்டாவது சம்பவத்தில் பிரசல்ஸில் இருந்து ஹொங் கொங்கிற்கு வந்திறங்கிய இர ண்டு பேர் அவர்களது பயணப் பைகளில் சுமார் 14.5 கிலோ கிராம் போதைப் பொருட்களை வைத்திருந்ததாக தெரிவிக்கப் பட்டது. இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணை க்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

## ஐ.எஸ்.தலைவரை கண்டுபிடிக்க உதவிய மோப்ப நாய்க்கு விருது வழங்கி கௌரவிப்பு



(வோஷிங்டன்)

தலைமறைவாகியிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தின் தலைவர் அல் பக்தாதியைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்த மோப்ப நாயான "கோனன்" ஐ வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விருது வழங்கி கௌரவித்தார்.

சிரியாவில் பதுங்கியிருந்த ஐ.எஸ்.தீவிரவாத இயக்க தலைவர் அல் பக்தாதியை கடந்த மாதம் அமெரிக்கப் படையினர் கண்டு பிடித்து சுற்றி வளைத்தனர்.

தப்பித்துச் செல்வதற்கு வேறு வழியில்லாத நிலையில் அல் பக்தாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து உயிரிழந்தார். முன்னதாக அல் பக்தாதியின் மறைவிடத்தை கண்டுபிடிப்பதில் அமெரிக்க இராணுவத்தின் மோப்ப நாயான கோனன் முக்கிய பங்காற்றியது.

அல் பக்தாதியின் இருப்பிடத்தை மோப்பம் பிடித்து, அவரை விரட்டிச் சென்றது. ஆனால் பக்தாதி வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் கோனன் காயமடைந்தது.

மோப்ப நாயான கோனனை வெகுவாகப் பாராட்டிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பக்தாதியை விரட்டியடித்து தற்கொலை செய்ய தூண்டிய தீரமான நாய் இதுதான் எனக் கூறி அதன் புகைப்படத்தை டுவிட்டரில் ஏற்கனவே வெளியிட்டார்.

இந்த நிலையில் குண்டு வெடிப்பு காயங்களில் இருந்து தேறிய மோப்ப நாய் கோனனை வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து ட்ரம்ப் விருது வழங்கி கௌரவித்தார்.

அதனை தொடர்ந்து, ஊடகவியலாளர்களுக்கு கோனனை அறிமுகம் செய்து வைத்து பேசிய ட்ரம்ப், இந்த மோப்ப நாயை தான் நேசிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் கோனன் உலகின் மிகச்சிறந்த நாய்களுள் ஒன்றாக திகழ்வதாகவும் இது தமது நாட்டுக்கு பெருமையளிப்பதாகவும் ஜனாதிபதி ட்ரம்ப் குறிப்பிட்டார். (ஜ-2)

# ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற உலக நாடுகள் முன்வர வேண்டும்

## பழ.நெடுமாறன் கோரிக்கை

(நாகப்பட்டினம்)

இலங்கைத் தமிழர்கள் மிகப் பெரிய அழிவை எதிர்நோக்கி இருப்பதால், அவர்களை காப்பாற்ற உலக நாடுகள் முன்வர வேண்டும் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவரான பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக நாகப்பட்டினத்தில் கடந்த 25 ஆம் திகதி அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு கூறியதை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டது. இந்நிலையில் சோனியா காந்திக்கு அளிக்கப்பட்டு வந்த உயர் பாதுகாப்பை மத்திய அரசு திரும்பப் பெற்றதை கண்டிக்காமல், விடுதலைப் புலிகளால் சோனியாகாந்தி உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று மக்களவையில் தி.மு.க. உறுப்பினர் டி.ஆர்.பாலு கூறியிருப்பது வீண் பழிசுமத்தும் செயல். இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு 2009 ஆம் ஆண்டில் வருகை தந்த 3 இலட்சம் இராணுவத்தினர் தற்போது வரை அங்கு தான் இருக்கிறார்கள். இலங்கை அரசு தற்போது கொண்டு வந்துள்ள அவசரகாலச் சட்டம் புதிதாக இராணுவத்தை கொண்டு வருவதற்கான சட்டம் அல்ல. ஏற்கனவே அங்கு இருக்கின்ற இராணுவத்திற்கு அதிக அதிகாரத்தை அளிக்கும் சட்டம். அங்கு புதிதாக



அமைந்த ஆட்சியில், இலங்கை தமிழர்கள் மிகப்பெரிய அழிவை எதிர்நோக்கி இருப்பதால் அவர்களைக் காப்பாற்ற உலக நாடுகள் முன்வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெண்களுக்கு சுதந்திரமான சூழலை உருவாக்குவோம்

## யாழில் பிரசார செயற்பாடுகள் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையமானது (JSAC) பால் நிலை வன்முறைக்கு எதிரான 16 நாட்கள் பிரசார செயற்பாடுகளை "பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவோம்" என்னும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வை யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பால் நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரசுரத்தை வெளியிட்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில் யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் நா.சுகிர்தராஜ் மற்றும் பணியாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், யாழ்.மாவட்ட செயலக மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் ச.லேனுகாராணி மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இப்பிரசாரச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டின் இறைமை மீது ஆதிக்கம் செலுத்தாத நாடுகளுடன் மட்டும் நட்புறவு கொள்ளுங்கள்

## தினேஷிற்கு குணவன்ச தேரர் அறிவுரை

(கொழும்பு)

நாட்டின் இறைமை மீது ஆதிக்கம் செலுத்தாத நாடுகளுடன் மட்டும் நட்புறவு கொண்டு நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கி கொண்டு செல்லுமாறு எல்லே குணவன்ச தேரர் அறிவுரை வழங்கினார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு அறிவுரை வழங்கினார்.



"உண்மையான நட்புடைய சர்வதேச நாடுகளின் அரச தலைவர்கள் இன்னுமொரு நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில் செயற்பட மாட்டார்கள்.

நாட்டின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சர்வதேச நாடுகளுடன் நட்புறவை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

மேலும் அமைச்சின் நிதி மற்றும் அரசாங்க சொத்துக்களை முறைகேடின்றி கவனமாகப் பயன்படுத்துங்கள்.

எமது நாட்டை சர்வதேச மட்டத்தில் சிறந்த நிலைக்கு தரமுயர்த்துவதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுங்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## களிப்பு! மகிழ்வு! ஆனந்தம்!

எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது என்று சொல்லி விட்டு என்னிடம் ஒருவர் வந்து கொஞ்ச நேரம் பேசின துக்கு அப்புறம் அவர் அப்படி சொல்லியிருந்தால் அதிலே ஒரு அர்த்தம் இருந்திருக்கும். வருகிறதுக்கு முன்னாடியே வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது என்கிறார்.

என்ன சேர் விடயம் என்று விசாரித்தேன்.

எங்க வீட்டிலே தினம் மூன்று வேளையும் ஒரே விதமான சாப்பாடு சேர். வித்தியாசமே கிடையாது. இப்படி பட்டினி கிடந்து செத்து விடலாம் என்று தோன்றுகிறது என்றார். ஒரு பெரியவர் சொன்ன தத்துவத்தைச் சொல்லுவதற்கு ஆள் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது ஒருவர் கிடைத்து விட்டார். விருவெனா சொல்ல ஆரம்பித்தேன்...

நாம அனுபவிக்கிற உணர்வுகள் களிப்பு, மகிழ்வு, ஆனந்தம் இவை மூன்றுக்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. மேம்போக்காக பார்க்கிறதுக்கு இது மூன்றும் ஒன்று மாதிரி தோன்றும். ஆனால் அது அப்படியில்லை. களிப்பு என்பது உடம்பைப் பொறுத்தது. மகிழ்வு என்பது மனதைப் பொறுத்தது. ஆனந்தம் என்பது ஆன்மாவைப் பொறுத்தது. இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புகளின் தன்மையும் வேறு வேறு!

முதலிலே களிப்பு என்பதை எடுத்துக் கொள்வோம். நம்ம புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உண்டு . அது எப்படி என்றால் சீக்கிரமே சலிப்பு உண்டு பண்ணும். ஒருவர் அந்தப் பொருளை எடுத்துக் கொண்டால் அது இன்னொருத்தருக்கு குறைந்து விடும். உணவு, உடை இதெல்லாம் களிப்பைத் தரக் கூடிய பொருட்கள்.

இப்பொழுது உதாரணத்துக்கு ஒரு மேசையில் ஒரு பாத்திரத்திலே பத்து இட்லி இருக்கிறது.அதிலே ஒரு இரண்டு இட்லியை நம்ம தட்டிலே இட்டு எடுத்து வைத்துச் சாப்பிடுகிறோம். நாம சாப்பிட்ட அந்த இட்லி நிச்சயமாக எதிரிலே உட்கார்ந்திருக்கிற வருக்கு இல்லை. நாம சாப்பிட்ட அதே இட்லியை அவரும் சாப்பிட முடியாது. அவர் வேறுதான் எடுத்து வைத்திருக்க வேண்டும். அது மாதிரி நாம ஒரு சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டால் அது இன்னொருதருக்கு இல்லை என்று ஆகிவிடும். ஒரே சட்டையை ஒரே நேரத்தில் இரண்டு பேரும் போட்டுக் கொள்ள முடியாது.

புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய இது மாதிரி பொருட்கள் எல்லாம் முதல் தடவை நமக்கு கொடுக்கிற களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியிலே வெறுப்பாகவே மாறிவிடும்.

ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதல் இட்லி தரக் கூடிய சுவையை மூப்பதாவது இட்லி தருமா?

முதல் தடவை புதுச் சட்டையை போட்டுக் கொள்ளும் போது நமக்கு இருக்கிற களிப்பு அதையே நூறாவது தடவை போட்டுக் கொள்ளுகிற போது இருக்கிறதா? இது தான் களிப்பு. அதாவது சீக்கிரமே சலிப்பைத் தரக்கூடியது. ஒருவர் எடுத்துக் கொண்டால் இன்னொருவருக்கு குறைந்து போகக் கூடியது. ஆனால் மகிழ்வு என்கிறது அப்படி இல்லை. ஒருவர் அனுபவிக்கிறதனாலேயே இன்னொருதருக்குக் குறைந்து போகாது. காலையிலேயே சூரியன் உதயமாகிறதை பார்த்து சந்தோசப்படுகிறீங்கள். அதையே இன்னொருத்தர் பார்த்து சந்தோசப்படலாம். ஒரு நல்ல சங்கீதத்தை கேட்கிறீர்கள். ஒரு அழகான ஓவியத்தை ரசிக்கிறீங்கள். நீங்க இரசிக்கிற அதே நேரத்திலே இன்னொருத்தரும் அதை ரசிக்கலாம். அதனாலே அது குறைந்து போகப் போறதில்லை. இது மகிழ்வு. ஆனால் ஒன்று ஒரே பாடலை திருப்பத் திருப்ப கேட்டுக் கொண்டிருந்தால் கடைசியிலே அலுப்புத் தட்டும். அதாவது மகிழ்வு என்பது எப்படி என்றால் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிறதாலே குறையாது. ஆனால் ஒரே பொருள் மீண்டும் மீண்டும் அனுபவிப்பைத் தரப் போகிறது முதலிலே மகிழ்வு அதிகரித்து அதுக்கப்புறம் அது மங்கி மறைந்து போய் விடும். சரி மூன்றாவதாக சுகம் தரக்கூடிய ஆனந்தம் எப்படி என்றால் இது நமக்குள்ளேயிருந்து சுரக்கிறது. மனசு சலனங்களிலே இருந்து விடுபடுகின்றபோது இந்த ஆனந்தம் நமக்குக் கிடைக்கும். இது நிலையான சுகம். ஆத்ம சுகம் களிப்பிலேயிருந்து மகிழ்வுக்கும் மகிழ்விலேயிருந்து ஆனந்தத்திற்கும் செல்வதுதான் மனிதன் நடத்த வேண்டியது முக்கியமான பயணம்.

இவ்வளவு விடயத்தையும் கேட்டுக் கொண்டு இந்தக் காலத்துப் பையன் ஒருத்தன் என்னிடம் சொல்கிறான் சேர் இப்பொழுது நீங்க ஒரு சாப்பாட்டு மேசையிலே ஒரு பத்து இட்லியை வையுங்க. என்னை உட்கார வையுங்க.

எதிரிலே இன்னொருத்தரை உட்கார வையுங்க. நான் களிப்பு மகிழ்வெல்லாம் தாண்டி நேரடியாக ஆனந்தத்திற்கு பயணம் செய்து காட்டுகிறேன் என்றான்.


அது எப்படி? என்ன செய்வாய் என்று கேட்டேன் ஆச்சரியமாக. இரண்டு இட்லி சாப்பிட்டால்தானே களிப்பு. நான் பத்து இட்லியையும் மொத்தமாகச் சாப்பிட்டிடுவேன். அடுத்தவனுக்கு எதுவுக் கிடைக்காது. அவனுக்குக் கிடைக்காத படி நாமே சாப்பிடுகிறோமே... அது தானே நமக்கு ஆனந்தம்.

# கிழக்குப் பல்கலையிலும் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு




மாவீரர் நாள் நேற்றுப் புதன்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# 20 குற்றச்சாட்டுக்களின் கீழ் றிசாத்துக்கு எதிராக முறைப்பாடு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக 20 குற்றச்சாட்டுக்களின் கீழ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

புதிய சிங்கலே தேசிய அமைப்பால், நேற்றுப் புதன்கிழமை பொலிஸ் தலைமையகம் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் முந்தல் பகுதியில், பொது மக்களுடன் மோதலில் ஈடுபட்டதாக பாதுகாப்பு கமராக்களில் காட்சிகள் பதிவாகியுள்ளதாகவும் எனவே அவர் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை எனவும் புதிய சிங்கள ராவய அமைப்பு கேள்வி எழுப்பியது.

அதன் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

முன்னாள் அமைச்சர் றிசாத் பொதுமக்கள் சிலர் மீது தாக்குதல் மேற்கொண்டு குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்ததாகவும் அந்தக் காட்சிகள் அனைத்தும் பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டு, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் முறைப்பாடு செய்துள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாவீரர்களுக்கு வீரவணக்கம்




யாழிலுள்ள பிரபல பாடசாலை மாணவர்கள் மாவீ ரர்களுக்கு நேற்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர் . (இ-7-9)



யாழ்.இந்துக்கல்லூரியில் நேற்று சுகாதார நகரம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு சமுதாய குடும்ப மருத்துவத்துறை மருத்துவர் துவாரகாவின் வழிகாட்டலில் நடைபெற்றது. நற்சுகாதார பழக்க வழக்கம் மற்றும் தனிநபர் சுகாதாரத்தில் தேசிய சுகாதார முன்னேற்றம் போன்ற பல்வேறு விடயங்கள் பல் ஊடக கருவி மூலமும் மேடை நாடகம் மூலமும் விழிப்புணர்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.





முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் நேற்று மாவீரர் துயிலுமில்ல முன்றல்கள் மற்றும் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் ஈகச்சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:- சோபிகா, மகாலிங்கம்)

### சிறுபான்மை இன மக்கள்

# இனவாதிகளுடன் இணைந்திருக்காமல் எம்முடன் இணைந்து செயற்படுங்கள்

## லக்ஷ்மன் யாப்பா அழைப்பு



(பத்தரமுல்ல)

தமது அரசியல் இலாபத்துக்காக இனபேதத்தை உருவாக்கும் வகையில் வடக்கு-கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் பிரசாரங்களை முன்னெடுத்த சிறுபான்மை இன அரசியல் வாதிகளுக்கு தெற்கிலுள்ள மக்கள் சரியான பதிலடியைக் கொடுத்ததாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேகுணவர்த்தன எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது சிறுபான்மையின மக்களை தம்முடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுத்தார்.

பத்தரமுல்ல - நெலும்மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் தெரிவித்ததைப் போன்றே 16 தேர்தல் மாவட்டங்களிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கு-கிழக்கு வாக்குகளை எம்மால் பெறமுடியாது என்றும் அங்கு அவர்கள் பெருபான்மையைப் பெற்றுவிட்டால் ஏனைய பகுதிகளில் கிடைக்கும் வாக்குகளைக் கொண்டு வெற்றி பெறமுடியும் என்றுமே எண்ணியிருந்தனர். ஆனால் பெரும்பான்மை மக்கள் அவர்களுக்குச் சிறந்த பதிலடியைக் கொடுத்துள்ளனர்.

சிறுபான்மை இனவாத அரசியல் தலைவர்களின் பிரசாரங்களுக்கு தெற்கில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்கள் இனிவரும் காலங்களில் இனவாதிகளுடன் இணைந்திருக்காமல் எம்முடன் இணைந்து செயற்படுங்கள் என்று நாங்கள் அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

பொதுத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு ஐ.தே.கவினர் எமக்கு ஒத்துழைப்பு வழங்காமல் உள்ளனர். மக்களின் தீர்மானத்திற்கு இணங்கி விரைவில் தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஐ.தே.க. எமக்கு வழங்க வேண்டும்.

ஐ.தே.கவின் பின்வரிசை உறுப்பினர்கள் தங்களின் ஓய்வூதியத்தை மனதிற் கொண்டு செயற்படுகின்றார்கள். அத்துடன் எமது மூன்றுமாத கால ஆட்சியில் ஏதாவது தவறு இடம்பெறுமா? என்று எதிர்பார்த்திருக்கும் அவர்கள் அதன் மூலம் பயனடைவதற்கு கனவு காண்கின்றார்கள்.

அதனால்தான் இவர்கள் பாராளுமன்றத் தேர்தலுக்கு இணக்கம் தெரிவிக்காமல் இருக்கின்றார்கள்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதிலும் ஐ.தே.கவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தில் யாருக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கின்றதோ அவரே எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட வேண்டும்.

அவ்வாறு பார்க்கின்ற போது ரணில்விக்கிரமசிங்கவிற்கே பெரும்பான்மையான ஆதரவு இருக்கின்றது. அவரே எதிர்க் கட்சித் தலைவராக இருக்க முடியும். எங்கள் விருப்பமும் அதுவே என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அனைவரும் தத்தமது பொறுப்புக்களை நிறைவேற்றி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் - ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட அனைவரும் தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார். ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற புதிய இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்கள் நியமனத்தைத் தொடர்ந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்களுடனேயே எனக்கு வாக்களித்துள்ளனர். இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எனக்கு விருப்பம் இருந்தது.

ஆனால் எமது கொள்கைப் பிரகடனம் தொடர்பாக பார்க்கும் போது எமக்கு அதிகளவான பொறுப்புக்கள் உள்ளன. அதன் காரணமாகவே, அதே விதத்தில் பதவிகளை வழங்குவதற்குத் தீர்மானித்தோம்.

தமக்கு கிடைத்த அமைச்சு பதவி தொடர்பில் சந்தேகங்கள் இருக்கலாம். எனினும், பொறுப்புக்கள் அதிகம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மக்களின் தேவைகளை அறிந்து இந்த அமைச்சுப் பதவிகள் பிரேரிக்கப்பட்டன.

குறிப்பாக புகையிரத சேவை இராஜாங்க அமைச்சு பதவியை எடுத்துக்கொண்டால், இன்று புகையிரத சேவை தொடர்பாக பாரிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

அமைச்சுப்பதவிகள் கிடைக்காவிட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றக்கூடிய பொறுப்புக்கள் உள்ளன.



அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றி மக்களுக்குச் சேவை செய்ய் வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேலின் 76 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 54 வருட முழுநேர பொதுவுடமை அரசியல் செயற்பாடு தொடர்பான அனுபவப் பகிர்வு கடந்த 24 ஆம் திகதி புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம் பெற்றது.**

# நாடளாவிய ரீதியில் தொடரும் கடும் மழை; 5 பேர் பலி! 7 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த ஒரு வாரமாக நிலவும் சீரற்ற காலநிலையால் ஐவர் உயிரிழந்ததோடு 573 குடும்பங்களைச் சேர்ந்த 2272 பேர் பாதிக்கப்பட்டனர். இந்த சீரற்ற காலநிலை எதிர்வரும் சில தினங்களுக்குத் தொடரும் என்றும் சில பிரதேசங்களில் 150 மில்லி மீற்றரை விட அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. இதேவேளை அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் எனத் தெரிவித்து 8 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய சில பிரதேசங்களிலும் அதிக மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களினும் பொலநறுவை மாவட்டத்திலும் 150 மில்லி மீற்றரை அண்மித்த மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும். ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும்.

அத்தோடு மத்திய, வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் மழையுடனான கால நிலை நிலவும் போது காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருக்கிறது.



எனவே அடை மழை மற்றும் காற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

**சிவப்பு எச்சரிக்கை**

150 மில்லி மீற்றரை விட அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் எனத் தெரிவித்து 8 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, பொலநறுவை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

**பாதிப்பு**

கடந்த 18 ஆம் திகதி முதல் நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2272 பேர் பாதிக்கப்பட்டதோடு ஐவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

அத்தோடு கடும் காற்று மற்றும் வெள்ளம் என்பவற்றால் ஒரு குடியிருப்பு முழுமையாகவும் 38 வீடுகள் பகுதியளவிலும் ஏனைய கட்டடங்கள் மூன்று பகுதியளவிலும் சேதமடைந்தன. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேர் தற்காலிக முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டனர்.

**புத்தளம்**

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம், மஹாவெவ, பள்ளம, முந்தளம் மற்றும் ஆணமடு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் 549 குடும்பங்களைச் சேர்ந்த 2214 பேர் பாதிக்கப்பட்டதோடு, 11 குடியிருப்புக்கள் பகுதிளவில் சேதமடைந்தன.

**மொனராகலை**

மொனராகலை மாவட்டத்தில் பிபில பிரதேசத்தில் மண்சரிவால் 61 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேர் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவரும் தற்காலிக முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு நால்வர் உயிரிழந்தனர். உயிரிழந்தவரில் ஒருவர் கோரளைப்பற்று பிரதேசத்தில் பலத்த காற்றினாலும் ஏனைய மூவரும் மண்முனைப்பற்று பிரதேசத்தில் நீரில் மூழ்கியும் உயிரிழந்தனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரத்தில் பலத்த மழையால் நீர் மட்டம் அதிகரித்தமையால் ஆறொன்றில் பயணித்துக் கொண்டிருந்த படகு விபத்துக்குள்ளாகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பாதிக்கப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்தார்.

**களுத்துறை**

களுத்துறை மாவட்டத்தில் மதுரவெல மற்றும் இங்கிரிய பிரதேசங்களில் கடும் காற்று, மின்னல் தாக்கம் என்பவற்றால் 19 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் பாதிக்கப்பட்டதோடு ஒரு வீடு முழுமையாகவும் 18 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன.

**அம்பாந்தோட்டை**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடுவான பிரதேசத்தில் கடும் காற்றினால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டதோடு, குடியிருப்பொன்றும் சேதமடைந்தது.

**கேகாலை, முல்லைத்தீவு**

கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்ல மற்றும் ரம்புக்கன ஆகிய பிரதேசங்களில் 2 குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப் பேர் பாதிக்கப்பட்டதோடு இரு குடியிருப்புக்கள் பகுதியளவில் சேதமடைந்தன. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# டெங்குக் காய்ச்சலால் 90 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலால் இவ்வருடத்தின் முதல் பத்து மாத காலத்தில் 90 பேர் உயிரிழந்ததுடன் நாடளாவிய ரீதியில் 72 ஆயிரத்து 305 பேர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி அருண ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 15 ஆயிரத்து 220 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். நாட்டில் அதிகரித்து வரும் மழை காரணமாக டெங்கு நுளம்புகள் பரவக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்கள் சுற்றாடலை சுத்தமாக வைத் திருப்பதில் கவனம் செலுத்தாமையும் டெங்குக் காய்ச்சல் அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும்.

டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில் முப்படையினரையும் ஈடுபடுத்துவதற்கான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டது. என்றாலும் பொது மக்களும் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வலிகாமம் கல்வி வலய முத்தமிழ் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் முத்தமிழ் விழா இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பசு ஏலவிற்பனை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நாளை 29 ஆம் திகதி இடம்பெறவிருந்த ஏலவிற்பனை தவிர்க்கமுடியாத காரணத்தால் 2019.12.16 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் ஏலவிற்பனையில் பங்கு பற்ற விரும்பும் பொது மக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

01. ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்னர் பசுமாட்டினை பதிவாளரின் அனுமதியுடன் பொது மக்கள் பார்வையிட முடியும்.

02. ஏலவிற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தேசிய அடை யாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்.

03.ஏலவிற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையைமீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04.ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப் பொருளை அப்புறப் படுத்த வேண்டும். கொடுப்பனவு கள் பணமாக மட்டும் செலுத் துதல் வேண்டும்.காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)






சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெகன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு.ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# ஜனாதிபதி மேற்கொள்ளும் நன்மையான விடயங்களுக்கு ஆதரவளிப்போம்-அசாத் சாலி



(கொழும்பு)

ஜனாதிபதி மேற்கொள்ளும் நாட்டுக்கு நன்மையான விடயங்களுக்கு ஆதரவளிக்கப் பின்வாங்கமாட்டோம்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 10 இலட்சம் சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. என்றாலும் அதனை மறைக்க சிலர் முயற்சிக்கின்றனர் எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றும்போது தான் சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளால் மாத்திரமே வெற்றிபெற்றதாகத் தெரிவித்திருந்தார். யாராவது அவருக்குத் தெரிவித்ததையே அவர் அங்கு குறிப்பிட்டிருக்கவேண்டும். கோட்டாபயவுக்கு 10 இலட்சம் சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதனை மறைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.

அதாவது, நாட்டில் இருக்கும் 7 ஆயிரம் பிரதான விகாரைகள் ஊடாக ஒரு விகாரையில் இருந்து ஆயிரம் வாக்குகள் அடிப்படையில் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள தேர்தல் காலங்களில் தேரர்கள் நடவடிக்கை எடுத்ததாகவும் அதன் பிரகாரமே 69 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றதாகவும் ஒருசில தேரர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்கள் இனவாத அடிப்படையில் வாக்களிக்கவில்லை. அவ்வாறு வாக்களித்திருந்தால், ஹிஸ்புல்லாவுக்கோ சிவாஜிலிங்கத்துக்கோ வாக்களித்திருக்க வேண்டும்.

மாறாக தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த இனவாதம் மற்றும் தேசியவாத பிரசாரத்தில் சிறுபான்மை மக்கள் இனவாதத்துக்கு எதிராகச் செயற்பட்டு தேசியவாத கொள்கையில் இருந்த சிறந்த பௌத்தரான சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்திருக்கின்றனர். மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான் பதவியேற்கும் போது பல நல்ல விடயங்களைத் தெரிவித்திருந்தார். அவற்றை நாங்கள் வரவேற்கின்றோம். குறிப்பாக தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் தானே ஜனாதிபதி எனத் தெரிவித்து அந்த மக்களையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதாக குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நல்ல விடயங்களை யார் செய்ய முற்பட்டாலும் அதற்கு நாங்கள் ஆதரவளிக்க பின்வாங்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதிர்க்கட்சிக்கு அரச ஊடகங்களில் வாய்ப்பளிப்பதே எமது நோக்கம்

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் தமது பணியை மேற்கொள்வதற்கு அரச ஊடகங்களில் வாய்ப்பு வழங்குவதே எமது பிரதான நோக்கமாகும் என தகவல் தொலைத்தொடர்பு, உயர் கல்வி,தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவமதிப்புக்கள், சேறுபூசல்கள் அற்ற முதிர்ச்சியான ஊடக சம்பிரதாயமொன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் தனது பொறுப்புக்களை ஏற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்கள், அவமதிப்புக்கள், தாக்குதல்கள் இடம்பெற கடுகளவும் வாய்ப்பு வழங்க மாட்டேன்.

ஊடகத் துறை தொடர்பில் முன்னெடுக்கப்படும் வன்முறைகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோப்பாய் பிரதேச சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி



(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் தவிசாளர் அலுவலகத்தில் மாவீரர்களை நினைவு கூர்ந்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி கலந்துகொண்டனர்.

இதில் உரையாற்றிய தவிசாளர் நிரோஷ், எம் மண்ணில் இன ரீதியிலான அடக்கு முறைகளுக்கு எதிராக அகிம்சை வழிமுறை ஆயுத பலம் கொண்டு அடக்கப்பட்ட போது அதற்கு எதிராகவே ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றது.

இவ் ஆயுதப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தம் உயிரைத் தியாகம் செய்தனர். அவர்களை நாம் நினைவு கூருகின்றோம். அவர்களது தியாகங்கள் ஈடு இணையற்றது.

இந் நினைவு கூரல் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகும். போரில் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்துள்ளோம்.

அவர்களுக்காகவும் அஞ்சலிக்கின்றோம். அடிப்படையில் ஒவ்வொருவரும் தம் உயிரைத்தியாகம் செய்யும் போது அவர்கள் எமது மக்கள் சுபீட்சமாக சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உயரிய கனவைத் தான் கொண்டு மீளாத்துயில் கொள்கின்றனர். அவர்களை நினைவு கூருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1901

**கமலா**

தள்ளி இருந்த போது இருந்த மதிப்பு சில நேரங்களில் உடன் இருக்கும் போது கிடைப்பதில்லை!



**பங்கஜன்**

வாண்டுகளின் முகம்...



அண்ணே... உங்க போன்ல Game இருக்கா...


**தெய்வீகா**

நன்றி மறப்பவர்களை எண்ணி நீ நிம்மதி இழக்காதே...



உன் உதவியை மனிதர்கள் மறந்து போகலாம்... தெய்வம் மறப்பதில்லை!

**மகா**



தனியாக போராடுகிறேன் வெற்றி கிடைக்குமா என்று வருந்தாதே... நீ தனியாக போராடுவதே வெற்றி தான்.

**சரண்**


வாழ்க்கைல படிப்படியாத்தான் முன்னேறனும்...



அந்தப் படியத்தான் ரொம்ப நாளா தேடிக்கிட்டிருக்கிறேன்... யார் வீட்டில இருக்குன்னே தெரியல...

**புஸ்பலதா**


வெறுப்பதை விட ஒதுங்கிப்போவது நல்லது!



ஒதுங்கிப் போவதை விட மறந்து விடுவது அதை விட நல்லது!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஈழ மண்ணில் அதிசயம் நிகழ வேண்டும் பிரபாகரன் பிறந்தநாளில் ராமதாஸ் விருப்பம்



(சென்னை)

ஈழ மண்ணில் அதிசயம் நிகழ வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பிறந்தநாளை முன்னிட்டு, பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "பின்வாங்கா போர்த்திறன், அறம் வழுவா ஆட்சித்திறன், மதுவை மக்களிடம் நெருங்க விடா மாவீரன் பிரபாகரனுக்கு 65 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

படைகளால் மட்டுமன்றி, பழக்கவழக்கங்களாலும் சீரழிந்து கிடக்கும் தமிழீழத்தை சீரமைத்து, சிறப்பான ஆட்சி வழங்குவதே புலிகளின் தலைவனுக்கு செலுத்தும் மரியாதையாகும்.

மாவீரர்கள் மண்ணில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மொழி; கலாசார, பண்பாட்டு சீரழிவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை, தாங்கிக் கொள்ள முடியாதவை.

இந்தச் சீரழிவுகளை சரி செய்து தமிழர்களின் உன்னத, அறம்சார்ந்த வாழ்க்கை முறையை மீட்டெடுக்கவாவது அந்த மண்ணில் அதிசயம் நிகழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கத்தோலிக்க தேவாலயத்தில் தீ

(கற்பிட்டி)

கற்பிட்டி - பள்ளிவாசல்துறைப் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலால் குறித்த பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.


கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று அதிகாலை இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது தேவாலயத்தில் ஏற்றப்பட்டிருந்த விளக்கு தவறி விழுந்தே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் கட்டடத்தின் சில பகுதிகளுக்கு மாத்திரமே பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## நாமலுக்கான பயணத்தடை பெப்ரவரி வரை நீக்கம்!




(கொழும்பு)

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நிதி மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது நாமல் ராஜபக்ஷவின் சட்டத்தரணி தாக்கல் செய்த பிரேரணையை பரிசீலனை செய்த நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி இந்த அனுமதியை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கின் விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்ற உறுப்பினருக்கு சொந்தமான கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் மூலம் 30 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாக நாமல் ராஜபக்ஷ மற்றும் 5 பேருக்கு எதிராக மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கந்தபுராண படிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் (பெரியதம்பிரான் கோவில்) கந்தபுராண படிப்பு இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் தை மாதம் வரை நடைபெறவுள்ளது.

இந்த கந்தபுராண படிப்பு பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமாகும். இதில், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், சைவ சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் ஆகியோர் விளக்கவுரை வழங்குவர். (இ-5)

## எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் கட்சிக்குள்ளேயே பிரச்சினையை தீர்க்குமாறு சபாநாயகர் கோரிக்கை



(கொழும்பு)

நாடாளுமன்ற மரபுகளை மீறி எதிர்கட்சித் தலைவர் நியமனம் இடம்பெறக்கூடாது என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். அத்தோடு கட்சிக்குள்ளேயே பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சி தலைவர் யார்? என்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அந்தப் பதிவில் "எதிர்க்கட்சி தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் எனது தீர்மானம் நிறுவப்பட்ட நாடாளுமன்ற மரபுகளுக்குட்பட்டது.

அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும்போது நாடாளுமன்ற மரபுகள் மீறப்படக்கூடாது. இதில் சவால்கள் உள்ளதை நாம் அறிவோம்.

ஆனால் கட்சியின் பிரச்சினைகள் அக்கட்சிக்கு உள்ளேயே தீர்க்கப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 130 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 115 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 260 | 320 | 150 | 200 |
| தக்காளி | 140 | 110 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 90 | 140 | 80 | 160 |
| கரட் | 250 | 250 | 280 | 210 | 300 |
| பூசணி | 50 | 40 | 80 | 70 | 60 |
| புடோல் | 80 | 100 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 350 | 350 | 440 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 110 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 100 | 80 | 160 |
| பயற்றங்காய் | 140 | 150 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 150 | 250 | 280 | 240 | 200 |
| பீற்றூட் | 240 | 150 | 160 | 70 | 200 |
| கறிமிளகாய் | 300 | 280 | 280 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 700 | 600 | – | – |
| போஞ்சி | 100 | .80 | 120 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 120 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 70 | 40 | 60 |
| தேசிக்காய் | 100 | 150 | 150 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40-45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 240 | 600 | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | – | – | 120 | – | – |
| முள்ளங்கி | 150 | 150 | 140 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 25 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 25 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | 50 | 150 | 100 |

## சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை திருநெல்வேலி ஆடியபாதம் வீதி இல.47/2 இல் அமைந்துள்ள அரோட் (AROD) நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நிறுவனத்தின் முன்னாள் பயனாளிகள் மற்றும் சகல மாற்று வலுவுடையோரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)

# சிறுவர் அரங்கம்

## இன்றே செய்க



நாகராஜனுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை இருந்தது. ஆசை என்பது பொருத்தமான வார்த்தை இல்லை. ஆனால் இதைப் பற்றிப் பேசும்போதெல்லாம் நாகராஜன், "எனக்கு ரொம்ப நாட்களாக ஒரு ஆசை" என்றுதான் சொல்லுவார்.

தான் படித்த பள்ளிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பது தான் அந்த ஆசை. தன்னுடைய கல்வியறிவு, பண்பாடு, முன்னேற்றம் இவற்றுக்கெல்லாம் தான் படித்த பள்ளிதான் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது என்ற நன்றி உணர்வு அவருக்கு எப்போதுமே உண்டு. அந்த நன்றியை வெளிப்படுத்தும் விதமாகப் பள்ளிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பது அவர் விருப்பம். ஆனால் என்ன செய்வது என்றுதான் தெரியவில்லை.

சில வருடங்களுக்கு முன் சொந்த ஊருக்குப் போனபோது, தான் படித்த பள்ளிக்குச் சென்றார். அப்போது அங்கே தலைமையாசிரியராக இருந்தவரைச் சந்தித்துத் தன்னை ஒரு பழைய மாணவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த போது தலைமையாசிரியர் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

அந்தப் பள்ளி அரச உதவி பெறும் தனியார் பள்ளி. அங்கே பத்தாம் வகுப்பு வரை கல்விக் கட்டணம் கிடையாது. ஆனால் பதினொராம் வகுப்புக்கும், பன்னிரண்டாம் வகுப்புக்கும் கல்விக் கட்டணம் உண்டு.

மிகக் குறைந்த கட்டணம் தான் என்றாலும் அங்கே பத்தாவது வரை படித்த மாணவர்கள் பலருக்கு அந்தக் கட்டணத்தைக் கூடக் கட்டிப் படிக்கும் வசதி இல்லை என்பதால் பலர் பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விடுவதாகச் சொன்ன தலைமை ஆசிரியர், அவரைப் போன்ற பழைய மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக அளித்தால், அதை வங்கியில் நிரந்தர வைப்புக் கணக்கில் போட்டு அதிலிருந்து வரும் வட்டி மூலம் சில ஏழை மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அதிலிருந்து பெறலாம் என்றார். தன்னால் முடிந்ததைச் செய்வதாகச் சொல்லி விட்டு நாகராஜன் ஊர் திரும்பினார்.

தான் தொடர்பு வைத்திருக்கும் பள்ளித் தோழர்களை அணுகி இதுபற்றிப் பேசினார். அவர்கள் யாரும் இதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. தன் சொந்த முயற்சியில் ஏதாவது செய்ய முடியுமா? என்று யோசித்தார். அவரது பொருளாதார நிலை ஒன்றும் அவ்வளவு சிறப்பாக இல்லை. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே இருந்தார். மாதாமாதம் ஒரு சிறு தொகை சேமித்துப் பார்த் தார். அது போதாது என்று தெரி ந்தது.

இந்நிலையில் அவரது ஒரே மகனின் படிப்பு முடிந்து அவனுக்கு மிக நல்ல வேலை கிடைத்தது. சில மாதங்கள் கழித்து. வேலையில் அவன் நிலை பெற்ற பிறகு அவனிடம் தன் ஆசையைச் சொன்னார்.

"அப்பா! நான் இப்பதான் வேலையில் சேர்ந்திருக்கேன். என்னால இப்ப எதுவும் செய்ய முடியாதே!" என்றான்.

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். நீ இப்ப உன் சொந்தக் காலிலை நிற்கிறாய். நான் ஓய்வு பெற்றதும் வரும் ஓய்வூதியப் பணம் எனக்கும் உன் அம்மாவுக்கும் போதும். இதைத் தவிர, நான் கொஞ்சப் பணம் சேமித்து வந்திருக்கேன். அதில ஒரு ஐந்து இலட்ச ரூபாய் வரும். அதை நான் என் பள்ளிக்கூடத்துக்குக் கொடுக்கலாம்னு நினைக்கிறேன். அதில உனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லையே?" என்றார்.

"அப்பா, அது உங்க சேமிப்பு. நீங்கள் எப்படி வேணுமென்றாலும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்க சேமிப்புப் பணம் எதையும் நான் எதிர்பார்க்கலே! காலம் முழுக்க உங்களைப் பாத்துக்கிறது என்னோட பொறுப்பு" என்றான்.

"எதையும் நல்லா யோசனை பண்ணிச் செய்யுங்க" என்றாள் அவர் மனைவி.

நாகராஜன் அலுவலகத்தில் பேசித் தனது ஈ.பி.எஃப் சேமிப்பில் இருந்த ஐந்து இலட்சத்து சொச்சத்தைப் பெற்றார்.

பள்ளித் தலைமை ஆசிரியருக்குத் தொலைபேசியில் விடயத்தைச் சொன்னபோது அவர் மகிழ்ந்து, அன்றைய கட்டணங்களின் அடிப்படையில் ஐந்து இலட்சம் ரூபாயை நிரந்தர வைப்பில் போட்டால், அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நான்கு மாணவர்களுக்குக் கட்டணம் செலுத்த முடியும் என்றார். அடுத்த நாள் பாங்கில் டிமாண்ட் டிராஃப்ட் எடுத்து அனுப்புவதாகச் சொன்னார் நாகராஜன்.

அன்று இரவு நாகராஜனுக்கு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அடுத்த நாள் நினைவு திரும்பியதும் நாகராஜன் மகனிடம் முதலில் கேட்டது பாங்க் டிராஃப்ட் எடுப்பதைப் பற்றித்தான்.

"அதற்கென்ன அப்பா? நீங்கள் குணமாகி வீட்டுக்கு வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் அவர் மகன்.

"நல்ல காரியங்களைத் தள்ளிப் போடக்கூடாது. நான் ஏற்கனவே ரொம்ப டிலே பண்ணிட்டேன்னு நினைக்கிறேன். நான் செக்குல கையெழுத்துப் போடறேன். நீ பாங்கில போய் டிடி கொரியலில் வாங்கி இன்றைக்கே அனுப்பிடு!" என்றார்.

"சரி."

டிடி எடுத்து அதைப் பள்ளிக்கு கொரியரில் அனுப்பி விட்டதாக அன்று பிற்பகல் அவரிடம் சொன்னான் அவர் மகன். அதைக் கேட்டதுமே அவர் முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது. உடல் நிலை சரியாகி விட்டது போல் இருந்தது.

அன்று இரவு நாகராஜன் வைத்தியசாலையில் இறந்து போனார்.


குறள் 36:

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது

பொன்றுங்கால் பொன்றாத் துணை

பொருள்:

பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் நற்செயல்களைச் செய்ய வேண்டும். ஒருவர் மறைந்த பிறகு கூட, அவர் செய்த நற்செயல்கள் அவருக்கு அழியாத புகழைத் தரும்.



சி.கௌத்தம், தரம் 02, SOS பாடசாலை

## விடுகதைகளும் விடைகளும்

- தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?

  மீன் வலை

- வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?

  கத்தரிக்கோல்

- எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?

  விக்கல்

- ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள் அவள் யார்?

  துடைப்பம்/ தும்புத்தடி

- ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?

  தேன்கூடு

- வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி அவர்கள் யார்?

  பூட்டும் சாவியும்

- அதட்டுவான், அலறுவான் ஆனால் கோட்டையை விட்டு வரமாட்டான் அவன் யார்?

  நாக்கு

- அள்ள முடியும், ஆனால் கிள்ள முடியாது அது என்ன?

  நீர்

- சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?

  தீக்குச்சி

- செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?

  தொலைக்காட்சி

- கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?

  சோளக்கதிர்

சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.
- வள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களை திசைமுகப்படுத்தும் ஜனாதிபதியின் அணுகுமுறை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் அரசாட்சி தொடர்பில் பலரும் அதீத கவனம் செலுத்தி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் அவரின் செயல்திட்டங்களை உன்னிப்பாகப் பார்க்கின்றனர்.

இவ்வாறானதொரு பார்வைக்குக் காரணம் அவர் வெளியிட்டு வருகின்ற கருத்துக்களாகும்.

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் உரையாற்றுகின்ற சந்தர்ப்பங்களிலும் ஊடகங்களுக்குக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வேளைகளிலும் இந்த நாட்டின் அனைத்து மக்களையும் சமமாக வழி நடத்திச் செல்வேன். நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்தக் கடுமையாகப் பாடுபடுவேன். எனது பணியில் தமிழ், முஸ்லிம் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும்.

எனது ஆட்சியில் பழிவாங்கல்கள், துன்புறுத்தல்கள் எதுவும் இருக்க மாட்டாது எனக் கூறி வருகின்றார்.

இவ்வாறாக அவர் கூறியவற்றை செவிமடுத்த தமிழ் மக்கள் இதுகாறும் கோட்டாபய ராஜபக்ஷ என்ற தனிநபர் மீது கொண்டிருந்த நினைப்புக்களைக் கடந்து, அவரின் உரை மீது கவனம் செலுத்தத் தலைப்பட்டுள்ளனர்.

அதாவது இந்த நாட்டில் ஒரு நிலைத்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தமிழ் மக்களை அரவணைத்துச் செல்கின்ற மனநிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளாரா? என்ற கேள்வி ஒவ்வொரு தமிழ் மகனின் ஆழ் மனதிலும் எழுந்துள்ளது.

இதன்காரணமாக அவரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் ஒருமித்துக் பயணிக்கின்றனவா? என்ற ஆர்வமே ஜனாதிபதியின் உரைமீதும் செயற்பாடு மீதும் தமிழ் மக்கள் கவனம் செலுத்தக் காரணமாகிறது.

உண்மையில் ஒரு மேடைப் பேச்சாளனின் சிறப்பு ஆளுமை என்பது சபையைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்வதாகும்.

எவ்வளவுதான் சிறப்பாக உரையாற்றினாலும் உயர்ந்த கருத்துக்களை முன்வைத்தாலும் கேட்போர் கூட்டத்தை தன் பேச்சின்பால் ஈர்க்கத் தவறும்போது பேச்சாற்றல் மழுங்கிப் போகிறது.

ஆக, ஒரு பேச்சாளனின் முதல் பணி தன் பேச்சை சபையோர் கேட்க வைப்பதாகும்.

இதுபோல இந்த நாட்டின் புதிய ஜனாதிபதி தமிழ் மக்களின் மனங்களை வெல்வதாக இருந்தால், அவரின் முதற் பணி தான் கூறுகின்ற கருத்தின்பால் தமிழ் மக்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும்.

அந்த வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறிய கருத்துக்களைக் கவனிக்கின்ற அளவில் தமிழ் மக்களை அவர் திசைப் படுத்தியுள்ளார். இனி சொல்லியவண்ணம் செயல் அமையும்போது தமிழ் மக்களை நோக்கியதான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பு கவனத்தில் எடுக்கப்படும்.

இத்தகையதொரு அடிப்படைக் களநிலையை ஏற்படுத்துவதாக நேற்று அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாள் அமைகிறது.

ஆம், மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது தமிழ் மக்களின் உரிமை. அத்றகு எந்தத் தடையும் விதிக்கக்கூடாது என்பதான ஜனாதிபதியின் அணுகுமுறை அவரின் சொல்லுக்கு வலிமை சேர்ப்பதாக அமையும் எனலாம்.

# உயரதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறுவது வெள்ளைவானை மீண்டும் ஞாபகப்படுத்துகிறது

## மகேஷ் சேனாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர் பட்டியலை வெளிப்படுத்தி அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல் தடுத்திருப்பது அடிப்படை உரிமை மீறும் செயலாகும்.

நாட்டின் பாதுகாப்பு கடமையில் இருக்கும் அவர்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மக்களுக்கு வெள்ளை வானை ஞாபகமூட்டும் செயலாகும் என முன்னாள் இராணுவத் தளபதி ஜென்ரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய மக்கள் அமைப்பு காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் அதிகாரிகள் சிலர் நாட்டைவிட்டு வெளியேறாமல் அவர்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

இது பிரச்சினைக்குரிய விடயமாக இன்று பார்க்கப்படுகின்றது. 2010ஆம்ஆண்டு இந்த நிலைக்கு நானும் ஆளாகி இருந்தேன்.

அத்துடன் இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது குடும்பம் சகிதம் நாட்டைவிட்டு சென்றுள்ளதை அறிகின்றேன்.

எந்த அரசாங்கமாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பு கடமையை மேற்கொள்ளும் நிறுவனம் மற்றும் அந்த அதிகாரிகள் தொடர்பில் இதனையும் விட பொறுப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும். தற்போது இடம் பெற்றிருக்கும் ஒரு சில சம்பவங்கள் மீண்டும் வெள்ளை வானை ஞாபகப்படுத்தி இருக்கின்றது.

அத்துடன் கடந்த ஒரு வார காலத்தில் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்ட தீர்ப்புக்கள் மற்றும் கட்டளைகளைப் பார்க்கும் போது நீதிமன்றங்களில் வருடக் கணக்கில் விசாரித்துவரும் வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பது தெளிவாகின்றது என அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

## சட்டத்தை மீறி குற்றமிழைப்பவர்களை கைது செய்வதற்கு 1000 பேர் கடமையில்

கலால் கட்டளைச் சட்டத்தை மீறி குற்றமிழைப்பவர்களை கைது செய்வதற்காக விசேட நடவடிக்கையை எடுக்க நிதியமைச்சு அறிவுறுத்தியது.

அதன்படி நாடு முழுவதும் சுமார் 1,000 கலால் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக கலால் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபிலகுமாரசிங்க தெரிவித்தார். சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்கள் மற்றும் பெரியளவிலான கடத்தல்காரர்களைக் கண்டுபிடிப்பதே முக்கிய நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக 1913 என்ற அவசர இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திறன் வகுப்பறைத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலய ஒளி விழாவும் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் வி.என். பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக தீவக மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை எம். டேவிட் அடிகளார் (அல்லைப் பிட்டி மண்டைதீவு பங்குத் தந்தை), தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பி. ரவிச்சந்திரன், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் எஸ்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## வாசிப்பு மாத நிறைவும் பரிசளிப்பு விழாவும் நாளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கொடிகாமம் பேருந்து நிலையம் முன்பாகவுள்ள பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் ந.இராசவிசாகன், சிறப்பு விருந்தினர்களாக கச்சாய் மகா வித்தியாலய அதிபர் கா.குணசிங்கம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன், அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர், ஐ.தேவஈஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலக சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீசன், கொடிகாமம் பனை தென்னை வள அ.க.சங்க முகாமையாளர் து.தங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடி கொள்ளச் செய்யும் ஒன்றாகும். -ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும் இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒரு உபதேசத்தைக் கேட்க ஆறு மைல் செல்வது பெரிய காரியம் இல்லை. வீடு திரும்பிய பின் அதைப் பற்றிச் சிந்திக்க கால் மணி நேரம் செலவழிப்பதே சரியான காரியம் -பிலிப் ஹென்றி

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் அரசடி, சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக் குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாலை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பெலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பளை நகரம், புலோப்பளை, முகமாலை, எழுதுமட்டுவாழ், கிளாலி, Topical Lank ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம், மறக்காறம்பளை கணேசபுரம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### வெளிப்படையாகப் பேசுங்கள்



❖ பால், பழம், விதைகள் போன்ற உணவை சாப்பிடுங்கள். அது நல்ல சிந்தனைகளை தரும்.

❖ எப்போதும் இறைவனைச் சார்ந்து, அவரையே எண்ணிக் கொண்டிருங்கள். அதுவே மிகப் பெரிய தியானம்.

❖ சேவை செய்வதை ஒரு வீடாகக் கருதினால் அதன் சுற்றுச் சுவராக உதவியும், மேற்கூரையாக தெய்வத்தன்மையும், வீட்டு உரிமையாளராக ஞானமும் இருக்கின்றன. ஆனால், இதற்கெல்லாம் அடித்தளமாக மனம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வீட்டினால் பயன் ஏதுமில்லை.

❖ விருப்பங்களின் தொகுப்பே மனம். ஆனால், விருப்பமில்லாத மனம்தான் சுத்தமாக இருக்கும்.

❖ இறைவன் ஒவ்வொருவரிடமும் அமைதியின் மூலமாகவே பேசுகிறார். ஆகவே, அமைதியாக இருக்க முயற்சியுங்கள்.

❖ இறைவன், உடலுக்கு சக்தி தரும் ஊட்டச்சத்தைப்போல இருக்கிறார். மனப்பூர்வமான பக்தியினால், இறைநிலையை யாராலும் அடைய முடியும். இதில் ஆண், பெண் பேதம் கிடையாது.

# ஐ.பி.எல்.வரலாற்றில் அதிகம் ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர்கள்

ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர்கள் குறித்த விபரம் தெரிய வந்துள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கு உலகம் முழுவதும் அதிகளவில் ரசிகர்கள் உள்ளனர்.


ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் 2008 ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் (பிசிசிஐ) துவங்கப்பட்டது.

ஐ.பி.எல்.2020இற்கான ஏலம் வருகிற டிசெம்பர் 19 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெற உள்ளது.

இந்நிலையில் ஐ.பி.எல். போட்டிகளில் இதுவரை அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

யுவராஜ் சிங் - டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக கடந்த 2015 ஆம் ஆண்டு 16 கோடி ரூபாய்க்கு இவர் ஏலம் எடுக்கப்பட்டார்.

பென் ஸ்டோக்ஸ்- புனே சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்காக பென் கடந்த 2017 இல் 14.5 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டார்.




யுவராஜ் சிங் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக யுவராஜ் சிங் கடந்த 2014 இல் 14 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டார்.



தினேஷ் கார்திக் - டில்லி டேர்டெவில்ஸ் அணி தினேஷ் கார்த்திக்கை 2014 இல் 12.5 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது.



ஜெயதேவ் உனத்கட் - இவரை ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 2018 இல் 11.5 கோடி ரூபாய் ஏலத்தில் வாங்கியது.




எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் அடுத்த ஆண்டுக்கான ஐ.பி.எஸ். ஏலத்தில் எந்தெந்த வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்படுவார்கள் என்பது பலரின் எதிர்பார்பாக உள்ளது. (க)

# தேசிய மட்ட 100 மீற்றர் ஓட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் வெள்ளிப் பதக்கம்

விசேட தேவையுடையோருக்கான தேசிய மட்ட 100 மீற்றர் ஓட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் செல்லக்குமார் பவித்திரன் வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விசேட தேவையுடையோருக்கான தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இதில் 12 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த செல்லக்குமார் பவித்திரன் வெள்ளிப் பதக்கத்தையும் நீளம் பாய்தலில் நான்காமிடத்தையும் பெற்றுள்ளார். (க)





## பேருந்தை தவற விட்ட ஸ்மித்

# ஓடினான்... ஓடினான்... ஹோட்டல் வரை ஓடினான்

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், பேருந்தை தவறவிட்டு 3 கி.மீ. தூரம் வீதியில் ஓடியதாக கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பதவி வகித்த ஸ்டீவ் ஸ்மித், பந்தை சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக ஒரு வருடத்திற்கு கிரிக்கெட் விளையாட தடை பெற்றார். அதோடு அல்லாமல் அவருடைய தலைவர் பதவியும் பறிக்கப்பட்டு, ரசிகர்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டார்.



இந்த தடைக்காலம் முடிந்து உலகக்கோப்பை தொடரில் விளையாடிய ஸ்மித், மைதானத்திலேயே இங்கிலாந்து ரசிகர்களால் கிண்டலடிக்கப்பட்டார்.

ஆனால் அவர்கள் அனைவருக்கும் பதிலடி கொடுக்கும் விதமாக ஆஷஸ் தொடரில் களமிறங்கி சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார். ஒரு வருடத்திற்கு பின் கிரிக்கெட் விளையாடினாலும் அந்த ஒரு தொடரிலே ஐ.சி.சி டெஸ்ட் பட்டிங் தரவரிசையில் விராட்ஹோலியை பின்னுக்கு தள்ளி முதலிடத்தை பிடித்தார்.

அதுவரை அவரை கிண்டலடித்து கடுமையாக விமர்சித்த இங்கிலாந்து ரசிகர்கள் கடைசி போட்டியில் பெருமைப்படுத்தினர்.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய ஸ்மித், "அடுத்த போட்டியில் யாஷிர் ஷா பந்துவீச்சில் ஆட்டமிழக்கக் கூடாது என்ற உத்வேகத்தைக் கடந்த போட்டி எனக்கு கொடுத்துள்ளது. எனவே நான் அவருக்கு எதிராக இன்னும் கொஞ்சம் கூடுதலான கவனத்துடன் விளையாடுவேன்".

எனக்கு ஓட்டங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றால் நான் எப்போதுமே உடற்பயிற்சி கூடம் அல்லது ஏதேனும் ஒரு இடத்திற்கு ஓடி எனக்கு நானே தண்டனை கொடுத்துக்கொள்வேன் என கூறினார்.

மேலும், பிரிஸ்பேன் டெஸ்டில் தனது துடுப்பாட்ட தோல்வியால் ஹோட்டலுக்கு செல்லும் பேருந்தை தவறவிட்டு 3.கி.மீ. தூரத்திற்கு வீதியில் ஓடி தனக்கு தண்டனை கொடுத்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். (க)

# காயம் காரணமாக தவான் விலகல் அதிரடி காட்ட வருகிறார் சாம்சன்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இருபது-20 போட்டியில் முழங்காலில் காயம் காரணமாக ஷிகர் தவான் விலகியதால் சஞ்சு சாம்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஷிகர் தவான் தொடர்ந்து சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். எனினும் ஹோலி, ரவிசாஸ்திரியின் ஆதரவுடன் அவர் அணியில் இடம்பிடித்து வருகின்றார்.

இந்நிலையில், சையத் முஷ்டாக் அலி இருபது-20 தொடரின் போது ஷிகர் தவானின் இடத் முழங்காலில் காயம் ஏற்பட்டது.

இதனால், அவர் மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து விலகியுள்ளார்.



எனவே ஏற்கனவே சஞ்சு சாம்சனுக்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று ஹர்பஜன் சிங் உள்ளிட்ட பல வீரர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் விமர்சித்ததால், தற்போது அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அவரை மாற்று வீரராக தேர்வு செய்வதை நிறுத்திவிட்டு, அவரது திறமைக்கு மதிப்பளியுங்கள் என்று பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். (க)

## வெளிநாட்டு...

பகல் சில வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் துயிலுமில்லத்திற்கு வந்ததை அவதானிக்க முடிந்தது.

துயிலுமில்ல பணிகளில் இருந்தவர்களிடம் மாவீரர் தினம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆர்வமாக கேட்டறிந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது. (ம-3)

## குடும்பப் பெண்...

குமுதினி (வயது - 34) என்ற ஒரு பெண் பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் கடந்த ஆறு நாட்களுக்கு முன் குழந்தை பிரசவித்தமை குறிப்பித்தக்கது.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## சிகிச்சை பலனி...

கடந்த 05.11.2019 அன்று யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்துக்கு முன் ஆட்டோவில் சென்றபோது ரக்டருடன் ஏற்பட்ட விபத்தில் படுகாயங்களுக்குள்ளான இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## யாழ்ப்பாணப்...

லும் தடைகளை ஏற்படுத்தியபோதிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

சரியாக 6.05 மணிக்கு மாவீரர் தின ஒழுங்குக்கமைய மணியோசை ஒலிக்க, அகவணக்கம் செலுத்தப்பட்டு பொதுச் சுடரேற்றப்பட்டது.

பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தந்தை ஒருவர் ஏற்றி வைத்தார்.

பொதுச்சுடரேற்றலைத் தொடர்ந்து மாவீரர் பாடல் இசைக்க கலந்து கொண்ட மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் ஈகச் சுடர்களையேற்றி அஞ்சலி செய்தனர்.

மாவீரர் தின ஏற்பாடுகளை முடக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியினால் 27, 28ஆம் திகதிகளில் மாணவர்கள் எவரும் உள்நுழையா வண்ணம் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன், நிகழ்வுகள் எவையும் நடத்தப்படக்கூடாது என மாணவர் ஒன்றியத்துக்கு கண்டிப்பாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்றுக் காலை தடைகளை மீறி - பூட்டப்பட்டிருந்த பிரதான வாயிலால் உள்நுழைந்து மாவீரர் தின நிகழ்வுகளை மேற்கொண்டிருந்தனர். அதனையடுத்து பல்கலைக்கழக வளாகத்தினுள்ளிருந்து ஊழியர்கள் உட்பட அனைவரையும் பிற்பகல் 2 மணியுடன் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டதுடன், 4 மணியளவில் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் சங்கிலியால் பூட்டப்பட்டது.

அத்தனை தடைகளையும் மீறி மாணவர்கள் மிகவும் உணர்வுபூர்வமாக நினைவேந்தலை நடத்தியிருந்தனர். (ம-3,9,10)

## உணர்வெழுச்சி...

செலுத்தினர்.

தமிழர் தாயகத்தில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதிலும், எல்லா தடைகளையும் கடந்து தாயகத்தின் அனைத்து துயிலுமில்லங்களிலும் அவற்றின் அருகிலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ள எள்ளங்குளம், கோப்பாய், கொடிகாமம் துயிலுமில்லங்களின் அருகில் காலையில் அஞ்சலி நிகழ்வுகள் நடந்தன.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் துயிலுமில்லத்தின் அருகிலும், வல்வெட்டித்துறை தீருவில் பூங்காவிலும் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் கனகபுரம் துயிலுமில்லம், முல்லைத்தீவில் விசுவமடு துயிலுமில்லம், வவுனியாவில் நகரசபை மண்டபம், ஈச்சங்குளம் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம், மட்டக்களப்பில் மாவடிமுன்மாரி துயிலுமில்லம், திருகோணமலை சம்பூர் துயிலுமில்லம் உள்ளிட்ட பல இடங்களில் நினைவஞ்சலிகள் நடந்தன. (ம-3,9,10,30,60,78,100,114,250, 281,285,299,312,316,350)

## தமிழ்நாட்டில்...

தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன..

தமிழக சட்டமன்ற உறுப்பினர் தனியரசு உட்பட ஈழ ஆதரவாளர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள். (ம-3)

# சாவகச்சேரி புத்தூர் சந்தியில்
# கார் - மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சாவகச்சேரி புத்தூர் சந்தி பகுதியில் நேற்றிரவு கோர விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

யாழில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த காரும் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்திற்குள்ளாகியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் விபத்து ஏற்பட்டதற்கு காரின் ஓட்டுநரே காரணம் என கூறி அப்பகுதி இளைஞர்களால் காரின் ஓட்டுநர் சரமாரியாக தாக்கப்பட்டுள்ளார்.

காரின் ஓட்டுநரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# ஜெனிவாவில் ஒப்படைக்க
# முக்கிய ஆவணங்களை எடுத்துச் சென்றார் நிஷாந்த
## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

நாட்டைவிட்டு வெளியேறிய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை அதிகாரி நிஷாந்த சில்வா, பல ஆவணங்களை எடுத்துச் சென்று விட்டதாக சிங்கள ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நாட்டின் முக்கியமான அரசியல்வாதி மற்றும் பெருமளவு பாதுகாப்பு தரப்பினர் குறித்த விபரங்களை அவர் எடுத்து சென்றுவிட்டார் என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் ஒப்படைக்க அவை எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாமென பாதுகாப்பு தரப்பு நம்புவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற பாரதூரமான சம்பவங்கள் பலவற்றை குற்றப்புலனாய்வுத்துறை விசாரணை நடத்தியது.

இதன்போது, பிரதான விசாரணை அதிகாரியாக இருந்தவர் நிஷாந்த சில்வா.

இராணுவம், கடற்படை, புலனாய்வுத்துறை ஆகியவற்றை சேர்ந்த 1,500 பேர் வரையில் அந்த சமயத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணை செய்யப்பட்டதாகவும் அவர்களின் கைரேகை மற்றும் இரகசிய ஆவணங்கள் அனைத்தும் நிஷாந்த சில்வாவினால் எடுத்து செல்லப்பட்டு விட்டதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களின் தனிப்பட்ட விபரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களும் எடுத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## கடுமையான...

யான பிம்பம் இருந்த நேரத்தில், 2015ஆம் ஆண்டு அரசாங்கம் ஐ.நா. தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியதை அடுத்து இலங்கைக்கு ஆதரவாக நிலைமை மாறியது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதோடு அந்த தீர்மானத்தை அடுத்தே இலங்கையோடு இணைந்து பயணிக்க பல நாடுகள் இணக்கம் தெரிவித்ததாகவும் கூறினார்.

பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்றாலும் அலைகளைத் திருப்பி எதிர்மறையான விளைவுகளை எதிர்கொள்வது விவேகமானதாக நாங்கள் கருதவில்லை என்றும் சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டமைப்பை சந்திக்க இணக்கம் தெரிவித்தால் நாமும் அவருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கின்றோம் என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (ம-3)

## வருணபகவானும்...

மாலை 6.05 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நேரத்தில் மழையும் தூவானமாக தனது அஞ்சலியை மாவீரர்களுக்கு செலுத்தியது. (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27.11.2019
சீட்டிழுப்பு இலக்கம் 0995
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 8 0 6 6 8 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2313
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 03 66 69 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 0464
D 12 49 57 67 80

என்ட்பிரைஸ் ஶ்ரீலங்கா
தன நிதானய
திகதி 27.11.2019
சீட்டிழுப்பு இலக்கம் 0231
M 17 18 32 54
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27/11/2019 வெற்றி வாரம் 2690 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் துலாம் 19 39 42 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,754,332
2019/11/28 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
www.dlb.lk

සංවර්ධන වාසනාව உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 300
சீட்டிழுப்பு திகதி 27.11.2019 நீலம்
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 13 14 15 விதி எண் 5
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 47,565,324
2019.11.29 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 804 வர்ணம்: இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,061,725/-
சீட்டிழுப்பு திகதி: 2019.11.27
வெற்றி இலக்கங்கள் 21 43 73 74 C

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3267 திகதி: 2019.11.27
வெற்றி இலக்கங்கள் 06 14 33 61 D
1680
அடுத்த தினக்கிழமை ஜக்பொட் 30,000,000/-
www.dlb.lk

# உடன் அமுலாகும் வகையில் வரி திருத்தங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

உடன் அமுலாகும் வகையில் வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை நேற்று கூடியது. இதன்போது, மேற்கொள்ளப்பட்டுள்ள வரி திருத்தங்கள் தொடர்பில் தெளிவூட்டப்பட்டது.

வீட்டுப் பொருட்களுக்காக அறவிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான தேச நிர்மாண வரி, பொருளாதார சேவைகளுக்கான கட்டண வரி, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் அறவிடப்படும் வரி ஆகியனவும் இரத்து செய்யப்பட்டுள்ளன. பங்குச்சந்தையில் அறவிடப்படும் மூலதன வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி, பிடித்து வைத்தல் வரி, வரவு வரி ஆகியவற்றையும் உடன் அமுலாகும் வகையில் இரத்து செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

நாட்டு மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் VAT வரியை 8 வீதம் வரை குறைத்துள்ளதாக அவர் கூறினார்.

டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் VAT வரி குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அறக்கட்டளை நிலையங்கள் மற்றும் சமய ஸ்தலங்களுக்கான அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் உழைக்கும் பணத்திற்கு முழுமையாக வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு வரியை 25 வீதத்தினால் குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## கடை வாடகைக்கு

நெல்லியடி பிரதான வீதி பெற்றோல் செற்றிக்கு அருகாமையில் கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு இலக்கம் :

077 720 7539 / 077 622 4082

(C-8334)

## ஐடியல் அக்கடமி

485, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 6 முதல் O/L வரை

கல்வியாண்டு - 2020

ஆரம்பம் - 30.11.2019

சனி 3.00 PM

தமிழ் மொழி மூலம் 6 - 11

ஆங்கில மொழி மூலம் 6, 7, 8

(C-8356)

## விற்பனைக்கு

A9 வீதியில் நாவற்குழியில்

"லங்கா அசோக் லேடன்"

நிறுவனத்துக்கு முன்பாக 9 பரப்பு காணியில் 9 அறைகளுடன் கூடிய விசாலமான மாடி வீடு, நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

071 220 3568, 077 801 0056

(C-8359)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg

கனடா - 950 /=Kg

ஜேர்மனி - 650 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

(C-8115)

## அறிவாலயம் தெல்லிப்பழை

2020

புதிய கல்வியாண்டுக்கான வகுப்புக்கள்

ஆரம்பம் : 30.11.2019 சனிக்கிழமை

காலை 8.00 மணி

- முன்பள்ளி முதல் தரம் 11 வரையிலான வகுப்புக்கள்

குறிப்பு :- 2020 தரம் 6 இல் கல்வி கற்க உள்ளோருக்கான ஆங்கில மொழி மூலமான வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

- தனி மாணவர் ஒழுக்கமும் தேர்ச்சியும்
- வாராந்த மற்றும் மாதாந்த பரீட்சைகள்
- வினாவிடை வகுப்புக்கள்

- நிர்வாகம்

தொடர்பு : 077 828 0900

(C-8358)

## நிரு ரீயூசன் சென்ரர் கோண்டாவில்

கல்வியாண்டு 2020

தரம் 3 முதல் 11 வரை தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்.

ஆரம்பம் 01.12.2019 ஞாயிறு 7 மணி

- மல்ரி மீடியா மூலம் கற்பிக்கப்படும்.

(C-8346)


## பெண்களிடையே கைகலப்பு

(சாவகச்சேரி)

இரண்டு பெண்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கை கலப்பாக மாறியதில் பெண் ஒருவர் தாக்கப்பட்டு மயங்கிய நிலையில் 1990 அவசர அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இந்த சம்பவம் கச்சாய் றோட் சாவகச்சேரி மகிழங்கேணிப் பகுதியில் நேற்று புதன்கிழமை மதியம் 11.00 மணிக்கு இடம் பெற்றது.

இந்த சம்பவத்தில் ரஞ்சன் வேணிதா வயது 34 என்பவரே காயமடைந்தவராவார். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3,114)

## 42 பணிப் பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

பணிப் பெண்களாக ஓமானுக்குச் சென்று அந்நாட்டில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான 42 பெண்கள் நாடு திரும்பியுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இவர்கள் நேற்று புதன்கிழமை நாடு திரும்பினர்.

ஓமான் நாட்டின் சலாம் விமான சேவைக்குச் சொந்தமான ஓ.வி.431 என்ற விமானத்தின் மூலமாகவே இவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்களினால் கடுமையான தாக்குதலுக்கு இலக்கான மேற்படி பெண்கள், ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தின் தடுப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


## றாஜ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(1194)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை



லண்டன் - 540/=

ஜேர்மனி - 640/=

இத்தாலி - 690/=

கனடா - 950/=

நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.

(C-8255)

## Study in ITALY

ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Why Study in ITALY ?

Admission open for 2020 Intake



- Bachelors & Master Degree
- Study in English Medium
- Scholarship up to 5,200 Euro
- No IELTS / TOFEL
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம் Schengen visa

Limited Seats Available

ICS Study Abroad

Admissions :- 077 301 3060

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்) 021 492 6222

107 B 1/1, Galle Road, Colombo 6

(C-8399)

## ஐரோப்பிய நாடு றொமானியா வேலைவாய்ப்பு



JCB/Excavator Opertaor

Electrician, தச்சுவேலையாள்

மேசன்/உதவியாளர், வெல்டர்

களஞ்சியப் பணியாளர்

தையல்மெஷின் ஒப்பறேட்டர்

மெக்கானிக்

மற்றும் வீதிக் கட்டுமானப்பணி அனுபவமுள்ளவர்கள்

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்!

சம்பளம் 600 - 1,100 US$ 99,500 - 199,100

விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!

3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...

077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221

எமரல்ட் ஐல் 221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

License No. 2268

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

(C-8351)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.